


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 சுறவம் நல்லோரை தைத் திங்கள் 30ம் நாள் (12-02-2025 புதன்கிழமை) வெளியீடு +94 21 222 9722



**பெருஞ்சிவனிரவு இம்முறை மாசித் திங்கள் 14 ஆம் நாள் (பெப் 26)**

**அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் - உத்தரகோசமங்கை**

# கட்புலன் அற்றோருக்கும் தென்னாட்டில் ஆதிரை அருட்காட்சி (ஆருத்ரா தரிசனம்)










# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம்.  www.thennadu.org

**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org



## கட்புலன் அற்றோருக்கும் தென்னாட்டில் ஆதிரை அருட்காட்சி



சோதியே வடிவான தோன்றாப் பெருமையனின் மார்கழித் திங்கள் ஆதிரை அருட்காட்சி (ஆருத்ரா தரிசனம்) தென்னாட்டில் மார்கழி 29 ஆம் நாள் சிறப்பாக இடம்பெற்றது. இதில் சிவனடியார்கள் எம்பெருமானின் ஆதிரை அருட்காட்சியை கண்ணாரக் கண்டுகளித்தனர்.

அதற்கும் மேலாக தென்னாட்டு ஆடல்வல்லான் கட்புலன் அற்றோருக்கும் தனது ஆதிரை அருட்காட்சியை வழங்கி அருளினார். கட்புலன் அற்ற 30 அடியார்கள் தென்னாட்டிற்கு வருகை தந்து, எல்லாம்வல்ல சிவனை மற்றும் பரிவாரக் கடவுளரை தங்கள் கைகளால் தொட்டு உணர்ந்து இறைவனின் அருட்காட்சியைப் பெற்றுய்தனர்.

இறைவனை பிறர் சொல்ல கேட்டிருந்தோம், திருமுறைகளில் உள்ளதை கேட்டிருக்கிறோம், கற்பனையில் கண்டிருக்கிறோம் ஆனால் வாழ்க்கையில் முதல் தடவை இன்று தான் தொட்டுணர்த்தோம் என்று கூறி மன மகிழ்ந்தனர். நாங்களே சிந்திக்காத ஒரு கோணத்தில் எங்கள் தமிழ் ஆகம வழிபாட்டு முறை மக்களுக்குப் அருட்பயன் தருகிறது என்பதை உணரும்போது பிறவிப்பயனை அடைந்தாற்போல் மனம் மகிழ்கிறது.

**ஊர்திரை வேலையுலாவும் உயர்மயிலைக்**
**ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்**
**- திருஞானசம்பந்தர்**

**ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்**
**அணியுடை ஆதிரைநாள் - திருப்பல்லாண்டு**

இப்படியான இறைவனின் அருட்காட்சியை காண்பதற்கு கட்புலன் இல்லாவிடினும் தொட்டு உணரலாம் என்ற பெரும் பேற்றினை தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் வழங்கியமையை இட்டு நாங்கள் மனமகிழ்வடைகிறோம். மடமாக மட்டுமல்ல பெரும் கோயிலாக அமைந்தாலும் அனைவருக்கும் இறைவனின் அருட்காட்சியை தென்னாடு என்றென்றும் வழங்கும்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தென்னாடு நிறைமதி அறிக்கை

(08-01-2025) – சாவகச்சேரி அருள்மிகு வாரிவனேசர் திருக்கோயில் நான்காம் ஆண்டு நிறைவு சங்கு நீராட்டு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (11-01-2025) – மார்கழித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றன. (12-01-2025) – தென்னாட்டில் மாலை நடேசர் திருஞ்சன வழிபாடுகள் இடம்பெற்றன. ஒரே நேரத்தில் ஆடல்வல்லானுக்கும், ஐம்பூதநாதருக்கும் ஆக இரண்டு திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்றன.

(13-01-2025) – தென்னாட்டில் அதிகாலை ஆதிரை அருட்காட்சி வழிபாடுகளும், திருவீதியுலாவும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பல அடியார்கள் கலந்து கொண்டு பயன் பெற்றிருந்தனர். மேலும் கட்புலனற்றோர்களும் வழிபாட்டில் கலந்து கொண்டு, எம்பெருமான் திருமேனிகளை தொட்டு உணரும் பெரும் வாய்ப்பினையும் பெற்றிருந்தனர். அன்றைய நாளில் அவர்களுக்கான பொங்கல் பானைகள் வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

(13-01-2025) – மார்கழித் திங்கள் நிறைமதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (14-01-2025) – தைப் பொங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (14-01-2025) – ஐம்பத்து மூன்றாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், கிளி/ பளை இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் சிவத்திரு. கந்தர் ஞானசீலன் அவர்கள், ஒசுத்திரேலியா அறம் அறக்கட்டளை பொருளாளர் சிவத்திரு. திருலோகநாதன் சஞ்சீவன் அவர்கள், உரும்பிராய் அருள்மிகு மலைவளர்காதலி (பர்வதவர்த்தினி) திருக்கோயில் தலைவர் மனோகரன் சந்துரு அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் துணைவேந்தர் ஐயா அவர்கள் கிளி/ பளை இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் சிவத்திரு. கந்தர் ஞானசீலன் அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் ஐம்பத்து மூன்றாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந்தார். மேலும் இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக, தென்னாடு முதல்வரின் மூத்த மகனும், தென்னாடு இதழ் ஆசிரியருமான சிவத்திரு. பார்த்தீபன் கேதாரன் அவர்கள் எழுதிய "Unlocking Tamil Heritage" என்ற நூல் வெளியீடும் இடம்பெற்றிருந்தது. அந்நூலிற்கான அறிமுக உரையை துணைவேந்தர் அவர்கள் வழங்கி வைத்திருந்தார்.

(15-01-2025) – தென்னாடு கோசாலையில் பட்டிப் பொங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது. (26-01-2025) – தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபையினால் வாதரவத்தையில் பாரம்பரிய பொங்கல் விழா சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. (27-01-2025) – தைத் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது. (30-01-2025) – அமாரர் திருமதி. இரத்தினம்மா சிவபாதசுந்தரம் அவர்களின் ஆண்டு திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(01-02-2025) – பாராளுமன்ற பொங்கல் நிகழ்வினை சாத்தியமாக்கிய பெருமகனார், கௌரவ அமைச்சர் சிவத்திரு. இராமலிங்கம் சந்திரசேகர், பா.உ அவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு தைத் திங்கள் 19ம் நாள் (பெப் 01) 2025 சனிக்கிழமை தென்னாட்டில் இடம்பெற்றிருந்தது. (03-02-2025) – அமாரர் சிவத்திரு. சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் அவர்களின் ஆண்டு திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (10-02-2025) – தைத் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

திருச்சிற்றம்பலம்

# 400 ஆண்டுகள் பழைமையான வட்டுக்கோட்டை துணைவி பிரகதீசுவரர் கோயில் மீள் உருவாக்க பணி ஆரம்பம்

வட்டுக்கோட்டை துணைவி பிரகதீசுவரர் கோயிலினை மீள் உருவாக்கம் செய்யும் பணி கடந்த 08-02-2025 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டம் கடந்த 08-02-2025 அன்று சிறப்பாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மிகத்தொன்மையானஎமதுமுன்னோர்களின் வழிப்பாட்டுத் தலமான இக்கோயில் பல ஆண்டு காலம் பராமரிப்பு இன்றிக் காணப்பட்ட நிலையில் அதனை மீள்உருவாக்கம் செய்வதற்கு நீண்ட காலம் முயற்சி எடுக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது அமெரிக்காவில் வசிக்கின்ற கைதடியினைச் சேர்ந்த கலாநிதி சிவயோகநாதன் அவர்களின்



மகள் செல்வி. பாலயோகஸ்தினி சிவயோகநாதன் அவர்கள், இக்கோயிலினை மீள் உருவாக்கம் செய்வதற்குரிய நிதியுதவியினை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் இடம் பெற்ற திருக்கோயில் மீளுருவாக்கும் பணிகளில் மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் ஐயா அவர்கள், மரபுரிமை மையத்தின் உப தலைவர் சத்திர சிகிச்சைப் பேராசிரியர் ரவிராஜ் அவர்கள், திருக்கோயில் மீள்உருவாக்கம் செய்வதற்குரிய நிதி உதவியினை வழங்கிய செல்வி. பாலயோகஸ்தினி சிவயோகநாதன் அவர்களின் தந்தை கலாநிதி சிவயோகநாதன் அவர்கள், யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் செயலாளர் சிவத்திரு. ரமேஸ் அவர்கள், பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் ஜெயதீஸ்வரன் அவர்கள், மேலும் இவ்வாலயத்தினை மீளுருவாக்கம் செய்யும் முக்கிய பணியில் இருக்கும் சிவத்திரு. கபிலன், செல்வி துஸ்யந்தி, சிவத்திரு. மணிமாறன் ஆகியோருடன் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் பத்திராசிரியர் சிவத்திரு. பார்த்தீபன் அவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர்.

திருச்சிற்றம்பலம்

# இலங்கை வரலாற்றில் பாராளுமன்றத்தில் முதன்முறையாக தைப்பொங்கல் விழா

இலங்கைப் பாராளுமன்ற வளாகத்தில் தைப்பொங்கல் தின நிகழ்வு கடந்த 24-01-2025 அன்று , கௌரவ சபா நாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் இடம்பெற்றது. வரலாற்றில் முதன் முறையாக இலங்கைப் பாராளுமன்றத்தினால் கொண்டாடப்பட்ட தைப் பொங்கல் நிகழ்வாக இது கருதப்படுகிறது.

கௌரவ கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சிவத்திரு. இராமலிங்கம் சந்திரசேகர், பா.உ அவர்களின் முன்மொழிவுக்கு அமைய, இப்பெரும் நிகழ்வு அரங்கேறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை வாழ் மக்களிடையே தமிழ் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டு மரபுகளை எடுத்துக்காட்டும் முகமாக இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தமை போற்றுதலுக்குரியதாகும். அந்த வகையில் இந்நிகழ்வை முன்னின்று நடாத்திய கௌரவ அமைச்சர் சிவத்திரு. இராமலிங்கம் சந்திரசேகர், பா.உ



அவர்களையும், துணைநின்ற சிவத்திரு. விஸ்வலிங்கம் முரளிதாஸ் அவர்களையும் (பாராளுமன்ற ஆராய்ச்சி உத்தியோகத்தர்) கௌரவிக்கும் நிகழ்வினை தென்னாடு சிவமடம் நிகழ்த்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

நிகழ்வில் உரையாற்றிய சபாநாயகர் குறிப்பிடுகையில், மனிதர்கள் இயற்கையுடன் எவ்வளவு நெருக்கமாகன தொடர்புகளுடன் இருக்கின்றார்கள் என்பதை தைப்பொங்கல் எடுத்துக் காட்டுவதாகவும், இதன் மூலம் அனைத்து இனங்களுக்கிடையேயான ஒற்றுமை மற்றும் சகவாழ்வு உறுதிப் படுத்தப்படுவதாகவும் கூறினார். கௌரவ புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி அவர்கள் தனது கருத்துரையில் அனைத்து இனக் குழுக்களுக்கிடையேயான ஒற்றுமைக்கு மொழித் தடையை கடக்க வேண்டும் என்றும், புதிய கல்வி சீர் திருத்தங்கள் மூலம் இதனை அடைய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், நிகழ்வில் உரையாற்றிய கௌரவ அமைச்சர் சிவத்திரு. இராமலிங்கம் சந்திரசேகர், பா.உ அவர்கள், பாராளுமன்றத்திற்கு நன்றிகூறி பாராட்டுக்களை தெரிவித்திருந்தார். தொடர்ந்து தமிழர் பாரம்பரியத் தைப் பறைசாற்றும் வகையில் நடன நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. அன்றைய நாளில் இந்நிகழ்வில் பாராளுமன்ற திணைக்களங்களின் தலைவர்கள், பணியாளர்கள், அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

திருச்சிற்றம்பலம்

# கடலூர் கரையேறவிட்ட குப்பம் அப்பர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு




சைவம் தழைக்க திருத்தொண்டாற்றி வந்த திருநாவுக்கரசர், சமணர்களின் சூழ்ச்சியாலும், பாடலிபுத்திர மன்னரின் உத்தரவாலும் சுண்ணாம்புச் சூலை, நஞ்சு கலந்த பால்சோறு, மதயானை எனப் பல சோதனைகளை திருத்தொண்டின் உறைப்பாலே வென்றார். இறுதியாக கருங்கல்லில் அவரைப் பிணைத்து நடுக்கடலில் போட்டனர். திருநாவுக்கரசர் திருவைந்தெழுத்தை ஓதி, திருவருளை மனமுருக வேண்ட, கருங்கல் தெப்பமாக மாறியது. அந்தத் தெப்பம் கரையேறிய இடம் கரையேறவிட்ட குப்பம் என போற்றப்பெறுகின்றது.

பல காலம் அங்கே நாயனாருக்கு ஒரு திருமேனி அமைத்து வழிபட்டு வந்த நிலையில், தற்போது அரன்பணி அறக்கட்டளை திருக்கூட்டத்தினர் இறைவன் திருவருளை முன்னிறுத்தி திருக்குளத்தை தூர்வாரி, திருப்பணிகள் செய்து, திருநாவுக்கரசு நாயனாருக்கு கருங்கல்லினால் கருவறை, விமானம், முன்மண்டபம், திருச்சுற்று மதில் ஆகிய திருப்பணிகளை முழுமையாக செய்து முடித்துள்ளனர். அந்தவகையில் கடந்த 07-02-2025 அன்று, அடியார் பெருமக்கள் புடைசூழ முதல் நாள் நிகழ்வாக திருவிளக்கு வழிபாடு, மூத்தபிள்ளயார் வழிபாடுடன், மூலத் திருமேனிகள் திருக்குடங்களை இடமாகக் கொண்டு வேள்விச்சாலைக்கு எழுந்தருளி, அடியார் பெருமக்கள் திருநாவுக்கரசு நாயனாரின் புராணத்தை பாராயணம் செய்ய முதற்கால வேள்ளி ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று கால வேள்விகளும் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 சுறவம் நல்லோரை தைத் திங்கள் 27ம் நாள் அன்று (09-02-2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்ளான விடைவான் வேளையில் குருமகா சந்நிதானங்கள், தமிழறிஞர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், சிவனடியார்கள், இப்பகுதிவாழ் பொதுமக்கள் ஆகியோர் முன்னிலையில் நான்கு கால வேள்வி தெய்வ வழிபாடாக ஞாலமளந்த மேன்மைத் தமிழால் திருநெறிய தீந்தமிழ் திருமுறைகள் ஓதி திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

திருத்தொண்டு நெறிவாழ வந்துதித்த திருநாவுக்கரசப் பெருமான், கல்லுடன் கட்டப்பட்டு கடலில் இடப்பட்ட போது **“சொற்றுணை வேதியன் சோதி வானவன்”** எனும் தேவாரத்தினைப் பாடி கரையேறிய, கடலூர் மாவட்டம் கரையேறவிட்ட குப்பம் எனும் இடத்தை அடுத்த தலைமுறையினருக்காக அரன்பணி அமைப்பினர் புதுப்பொலிவுடன் சீரமைத்து வழங்கியுள்ளனர். இதனை திருவருள் துணையுடன் ஒருங்கிணைத்து முன்னின்று நடாத்திய அரன்பணி அறக்கட்டளை அமைப்பினருக்கு தென்னாடு சிவமடத்தின் சார்பாக பாராட்டுக்களையும், நன்றிகளையும் கூறி மகிழ்கின்றோம்.

**திருச்சிற்றம்பலம்**

# புதுப்பொலிவுடன் கரையேறவிட்ட குப்பம் அப்பர் திருக்கோயில்













# மாவிட்டபுரத்தில் திருக்குறள் வளாகம் திறப்பு

சிவபூமி அறக்கட்டளையின் வெள்ளி விழா ஆண்டையொட்டி, யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கீரிமலை வீதி பகுதியில் 'திருக்குறள் வளாகம்' கடந்த 02-02-2025 ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. திருவாசக அரண்மனை, திருமந்திர அரண்மனை ஆகியவற்றை தொடர்ந்து சிவபூமி அறக்கட்டளையின் அற்புத படைப்பாக இந்த திருக்குறள் வளாகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.




1,330 திருக்குறளும் கருங்கல்லில் கைகளால் செதுக்கப்பட்ட நிலையில், திருக்குறள் ஆராய்ச்சி நூலகம், தியான மண்டபம், ஆய்வாளர்கள் தங்கும் வசதிகள் என்பனவற்றுடன் சிறப்பாக இந்த திருக்குறள் வளாகம் அமையப் பெற்றுள்ளது. மேலும் ஓர் அழகிய திருவள்ளுவர் உருவச்சிலையும் இங்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளது. திருக்குறள் வளாக திறப்புவிழா நிகழ்வில் முதன்மை விருந்தினராக இந்திய உச்சநீதிமன்றத்தின் நீதிபதி மாண்புமிகு நீதியரசர் உயர் திரு அரங்க. மகாதேவன் அவர்களும், சிறப்பு அழைப்பாளர்களாக யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதர் உயர்திரு. சாய் முரளி அவர்கள், சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் அருளாளர்களான நல்லை ஆதீன முதல்வர், மாவை ஆதீன முதல்வர், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளுடன், வடமாகாண ஆளுநர், பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மற்றும் பேராசிரியர்கள், அரச நிர்வாக அதிகாரிகள், வைத்திய நிபுணர்கள், தொழிலதிபர்கள், சைவ அமைப்பாளர்கள் மற்றும் பல அடியார் பெருமக்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்வில் திருமுறை விண்ணப்பம் மற்றும் இசை அரங்கங்களை நிகழ்த்துவதற்காக தமிழ்நாட்டிலிருந்து திருமுறைக் கலாநிதி குமாரவயலூர் பாலச்சந்தர் ஓதுவார் மற்றும் சீர்காழி அருணா, அகிலா சகோதரிகள் ஆகியோரும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமய, சமூக நல்லிணக்கத் தத்துவங்களை குறள் வாயிலாக எடுத்தியம்பிச் சென்றிருக்கின்ற, அரும்பெரும் புலவர் திருவள்ளுவர் பெருமானின் பெருமைகளை உலகறியச் செய்யும் வகையில், யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் திருக்குறள் வளாகத்தை, சிவபூமி அறக்கட்டளையினர் அமைந்துள்ளமை போற்றுதலுக்குரிதாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# முனைவர் கோ.ப.நல்லசிவம் ஐயாவிற்கு தருமை ஆதீன உயரிய விருது

கடந்த தை 21ம் (3-2-2025 திங்கள்) நாள் நடைபெற்ற அருள்மிகு அறம் வளர்த்தநாயகி உடனுறை ஐயாறப்பர் திருக்கோயில் திருக்குட நீராட்டில், தஞ்சை பல்கலைக்கழக தத்துவத் துறைத் தலைவர் ஐயா முனைவர் கோ.ப.நல்லசிவம் அவர்களுக்கு, தருமையாதீன நட்சத்திர குருமணிகள் 27ம் குருமகா சந்நிதானம் சீர் வளர்சீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பராமசாரிய சுவாமிகள் அவர்கள், **"தருமையாதீன இயலிசைப் புலவர்"** என்ற உயரிய விருதினை வழங்கி தமிழிசைக்கு பெருமை சேர்த்துள்ளார்.



தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல்த் துறை தலைவர், பேராசிரியரான முனைவர் சிவத்திரு. கோ.ப. நல்லசிவம் ஐயா அவர்கள் ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் என பலவற்றை வெளியிட்டுள்ளார். மேலும் 20 இற்கும் மேற்பட்ட தேசிய அளவிலான கருத்தரங்குகள், மாநாடுகளையும் நடாத்தியுள்ளார். அத்தோடு அமெரிக்கா, ஒசுத்திரேலியா, இலங்கை, இலண்டன், சிங்கப்பூர், மலேசியா, மியான்மர் (பர்மா), தென் ஆபிரிக்கா, ஜாம்பியா, நேபாளம் ஆகிய நாடுகளில் சொற்பொழிவுகள், தமிழிசை நிகழ்ச்சிகள், வகுப்புகள் போன்ற நிகழ்வுகளையும் நடத்தி வருகின்றார். உலகெங்கும் வலம்வந்து அரும்பணிகள் ஆற்றிவரும் ஐயா அவர்கள் கடந்த மார்கழித் திங்கள் 10ம் நாள் (25-12-2024) அன்று, யாழ்ப்பாண கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற, மார்கழிப் பெருவிழாவிலும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் **"தருமையாதீன இயலிசைப் புலவர்"** என்ற உயரிய விருதினைப் பெற்றுள்ள முனைவர் கோ.ப.நல்லசிவம் ஐயாவிற்கு தென்னாடு சிவமடத்தின் வாழ்த்துக்களையும் போற்றுதல்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

**திருச்சிற்றம்பலம்.**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**இக்காலத்தில் இறந்துபோன பல மானிடர்களையும் ஞானிகள் பாபாக்கள் என்றெல்லாம் பெயர் வைத்து கோயில் திருக்குடமுழுக்கு ஓமம் திருத்தேருலா என்றெல்லாம் உழல்கின்றார்களே இதனை ஏற்கலாமா?**

**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**

இவர்களுக்குச் செய்யும் பூசையெல்லாம் அவத்திற்குச் செய்யும் பூசைகளேயாகும். எனினும், ஒருசிலர் இவற்றால் பயனுண்டு என்று உழலுகின்றனர். யாருக்கும் எவருக்கும் பூசை செய்தாலும் அருள்வது சிவபெருமான் ஒருவரேயாகும்.

**யாதொரு தெய்வம் கொண்டீர்**
**அத்தெய்வ மாகிஆங்கே**
**மாதொரு பாகனார்தாம்**
**வருவர்மற் றத்தெய்வங்கள்**
**வேதனைப் படும் இறக்கும்**
**பிறக்கும் மேல்வினையும் செய்யும்**
**ஆதலான் இவைஇ லாதான்**
**அறிந்துஅருள் செய்வன் அன்றே! -**

**- சிவஞானசித்தியார்**

எனவே, நான் என்னால் ஞானியென்று மதிக்கப்பட்டவொருவர் இறந்துவிட்டார் எனின், அவருக்கு சிலை வைத்துப் பூசை செய்தால் அவரால் அப்பூசையைக் கூட உணர முடியாது. ஏனெனில், அவர் உண்மை ஞானியாய் இருந்தாற்கூட, பிறிதொரு பிறவியில் முத்தியை எட்டும்வரை பயணித்துக்கொண்டேயிருப்பார். சிவஞானியாகும் வரை பிறவாமுத்தி கிடையாது. இதனைப் பெரியபுராணத்தில் சாக்கிய நாயனார் சரிதத்தில் நன்றே தெளியலாம்.

**செய்வினையும் செய்வானும்**
**அதன்பயனும் சேர்ப்பானும்**
**மெய்வகையால் நான்காகும்**
**விதித்தபொருள் எனக்கொண்டே**
**இவ்வியல்பு சைவநெறி**
**அல்லவற்றுக் கில்லையென**
**உய்வகையால் "பொருள் சிவன்" என்(று)**
**அருளாலே உணர்ந்தறிந்தார்.**

**- பெரியபுராணம் - சாக்கிய புரா. 5**

எனவே, சிவமே பொருள் என்பதனைத் தெளிவதே சிவஞான நிலையாகும். இந்நிலையே பிறவாமுத்திக்கு வழியாகும். எனவே, இந்நிலை எய்தாத ஒருவருக்கு நாம் அவருடைய உயர்வு கருதிக் கோயில் கட்டிக் கும்பிட்டாலும் தேர் இழுத்தாலும், அந்த உயிரால் நம் செயலை உணரமுடியாது. அந்த உயிர் பிறிதொரு பிறப்பில் இன்ப துன்பங்களில் உழன்று மேன்மேலும் பங்குவப்பட்டுக் கொண்டிருக்கும். ஆனால், உலகார் இவ்வுண்மை உணராது தம் தெய்வங்களுக்கு அறியாது செய்யும் இவ்வழிபாடுகளுக்கெல்லாம் சிவபெருமானே பொருளாகி நின்று அருள்பாலித்தவாறுள்ளார் என்பதுதான் சிவஞானசித்தியாரில் யாதொருதெய்வம் கொண்டீர் திருப்பாடலால் அருணந்தி சிவாசாரியப்பெருமான் உணர்த்தியருளிய உண்மையாகும். இவ்வுண்மையைத் தெளிந்து சிவத்தையே சிக்கெனப் பிடித்து நிற்கவேண்டிய தமிழர், ஏனையோர்போல் பிறழ்ந்து சிவத்தை ஒருகணப்பொழுதேனும் நினையாது செத்துப்போனவர்களையெல்லாம் இம்மண்ணில் இறக்குமதி செய்து கோயில்கள் கட்டிக் குடகுழுக்குச் செய்வதெல்லாம் **"சைவசமயம்"** என்னும் தனிப்பெருஞ் சமயத்தை சீர்குலைத்து தமிழரிடம் விளங்கும் தனித்துவங்களை ஒழிக்க நினைப்போரின் சதியென்றே கொள்க!

திருஞானசம்பந்தப்பெருமானுக்கு வழிபாடு செய்யும்போதும் ஆசாமிகளுக்கு வழிபாடு செய்யும்போதும் சிவபெருமானே அருள்வதனால், ஆசாமிகள் வழிபாட்டை நிந்திப்பானேன் என்று சிலர் வாதஞ் செய்வதும் கண்கூடாய் உள்ளது. சைவசமயத்தின் கொள்கைகளில் தனித்துவமான ஒன்று உயிர் சார்ந்ததன் வண்ணம் என்பதாகும். அதாவது சிவத்தைச் சார்ந்தால் சிவமாகும். அவத்தைச் சார்ந்தால் அவமாகும். இதனை மிக எளிதாக, **"நல்லாரைக் காண்பதுவும் நன்றே"** என்ற பாடலினூடாகவும், **"தீயாரைக் காண்பதுவும் தீதே"** என்ற பாடலினூடாகவும் ஔவைப்பாட்டியார் அருளிச் செய்துள்ளார். திருஞானசம்பந்தப்பெருமான் வழிபாட்டினால் திருஞானசம்பந்தப்பெருமான் எய்திய பிறவாமுத்தியை எய்தும் நிலையை நாமும் பெற வழிபிறக்கும். ஆசாமிகள் வழிபாட்டினால் நாமும் ஆசாமிகளாகவே உழன்று கொண்டிருக்கவேண்டிய நிலையே நிலைக்கும். இந்த ஆசாமி வழிபாடுகளையெல்லாம் பரப்புவோர் பணத்தாசை பொருளாசை என்று உலக இன்பங்களை அறமற்ற வழியில் பெருக்கும் தரத்தினர் என்பதில் மாற்றுக்கருத்திருக்கா! உயர்ந்தோராயின், சாமி வழிபாட்டினை விடுத்து ஆசாமி வழிபாட்டினுள் உழலார்.

பண்டுதொட்டு நாயன்மார்களாலும் அருளாளர்களாலும் பீடுபெற்ற சைவசமய நெறிக்குக் குந்தகஞ் செய்யும் துணிவு பெறார்! ஆனால், ஓர் இனத்தின் தனித்துவப் பண்பாட்டு அடையாளங்களைச் சிதைக்கவேண்டும் என்னும் அரசியற் கோட்பாட்டாளர்களின் வலைக்குள் சிக்கி, அவர்களின் எடுபிடிகளாகி, சங்கராசாரிய சுமார்த்தமதக் கொள்கைகளோடு ஆசாமி வழிபாடுகளையெல்லாம் சைவசமயத்தினுள் திணிப்போர் அறம் பிறழ்ந்தோர் என்பதில் மாற்றுக்கருத்து சான்றோருக்கு இருக்கா! எனவே, இந்த அறம் பிறழ்ந்தோர் பரப்பும் வழிபாடுகளால் சார்ந்தன் வண்ணமாகி நாமும் அறம் பிறழ்ந்து உழல்வதே நிலையாகும்! இதற்குச் சிவபெருமானை நொந்து பயனில்லை! அவ்வழிபாடுகளால் உயிர்களுக்குக் கொடுக்கக்கூடிய பயன் அதுவேயாகும். விடத்தைக் குடித்தால் விடத்தின் பயனையும் அமுதத்தைக் அருந்தினால் அமுதத்தின் பயனையும் என்று, நடு நின்று பயன் செய்வதே திருவருளின் கடனாகும். **"தீதும் நன்றும் பிறர்தர வாரா"** என்ற தமிழர் முதுமொழியும் இவ்வுண்மையை உணர்த்தும். சிவபெருமான் உயிர்களுக்குச் செய்வது அருள் ஒன்றேயாகும். அதுவே ஐந்தொழிலாகவும் அமையும். இதில், சைவநெறி நிற்போர் உயர்வர். சைவ நிந்தனை செய்வோர் பக்குவம் பெறுதல் பொருட்டு மேலும் மேலும் உழல்வர்.

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 2ஆம் நூற்றாண்டு வரலாற்றுடன் தொடர்புடைய உகந்தை குடும்பிமலை சிவன் கோயில்



குடும்பி மலையில் சிவ வழிபாடு

இலங்கையின் பல பாகங்களில் குடும்பிமலை என்ற பெயரில் பல மலைகள் அழைக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஈழத்தின் கீழைக் கரையோரங்களில் இரண்டு குடும்பிமலை காணப்படுகின்றது. இது இயற்கையாக அமைந்து குன்று குடும்பி வடிவில் அமைந்திருப்பதனால் தொப்பிக்கல் என்றும் கூறுவர். இவ் வடிவமாயுள்ள மலை மட்டக்களப்பு கரடியனாறு அமைந்த பகுதியில் அமைந்துள்ளது. அவ் வடிவமாயுள்ள மற்றுமொரு மலை உகந்தைப் பிரதேசத்தில் குமணை சரணாலயம் அருகாமையில் அமைந்துள்ளது. இவ்விரு பிரதேசங்களும் தொல்லியல் எச்சங்கள் நிறைந்த பகுதியாகவும், இந்து சமயம் மற்றும் பௌத்த சமயப் பண்பாட்டின் தளங்களாகவும் விளங்கியுள்ளன.

குடும்பி மலையில் அமைந்துள்ள சிவன்கோயில், அடர்ந்த காட்டுப் பகுதியின் வழியாக குறிப்பாக பாணமையிலிருந்து உகந்தைக்குச் செல்லும் வழியில் சலவைக் களப்பின் மேற்குப் பக்கம் சுமார் 4 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.

குடும்பிமலையில் ஏறக்குறைய 15 மலைக்குகைகள் காணப்படுகின்றன. சில குகைகளில் பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட பாறைப் பொறிப்புக்கள் காணப்படுகின்றன. அத்தகைய கல்வெட்டுப் பொறிப்புக்கள் 17 என கணக்கிடப்பட்டுள்ளன. இவற்றில் ஐந்து கல்வெட்டுக்கள் பரணவிதானவின் இலங்கையில் உள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் இரு கல்வெட்டுக்கள் இந்து சமயக் கருத்துக்களைப் பிரதிபலிப்பவை ஆகும்.

குடும்பிமலையில் காணப்படும் குகைகளில் வாழ்ந்த மக்கள் ஆதித் தமிழர்கள் எனக் கருத இடமுண்டு. ஏனெனில் ஆதித் தமிழர் போற்றிய நந்தி வழிபாடு, நாக வழிபாடு, இலிங்க வழிபாடு, வேல் வழிபாடு இங்குள்ள குகைகளில் நிலவியிருப்பதனை இங்குள்ள தொல்பொருள் சின்னங்கள் எமக்கு காட்டி நிற்கின்றன. அதுமட்டுமன்றி இங்குள்ள இரு கல்வெட்டுக்களில் தமிழ் மொழிக்கேயுரிய **"பருமக", "கஹபதி"** ஆகிய சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதனால் இக்குகைளில் ஆதித் தமிழர்களே குடியிருந்துள்ளனர் என்பது புலனாகின்றது. இதேபோல் 02ம் நூற்றாண்டுக்குரிய "பருமக" என்ற பெயர் பொறிக்கப்பட்ட குகை விளிம்புக் கல்வெட்டு மட்டக்களப்பு வெல்லாவெளிப் பிரதேசத்தில் கண்டுபிடித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

இராமாயணம் இலக்கிய வடிவமாக எழுதப்படுவதற்கு முன்னர் இராவணன் எனும் தமிழ் அரசன் இலங்காபுரியின் தலைநகரம் ஒன்றை கீழைக்கரையில் அமைத்தான் என்பது சரித்திர ஆய்வாளர்களின் மரபு வழிவந்த கருத்தாகும். சிலர் இராவணனின் உப நகரமாக குடும்பி மலையையே உன்னரசுகிரியின் இராச்சியத்தின் தலைநகராக அமைத்தான் என்று கூறுவோரும் உளர். இதற்கேற்றால் போல் குடும்பிமலைப் பகுதியில் 500 ஏக்கர் பரப்பளவில் உன்னரசுகிரி இராசதானியின் இடிபாடுகளைக் காணக்கூடியதாக உள்ளது. இதேபோல் இம் மலைக்குச் சற்று தொலைவில் உள்ள சங்கமன்கண்டி மலை, நாகபர்வதமலை ஆகிய மலைப்பகுதிகளும் இராசதானிக்குரிய அழிபாடுகள் காணப்படும் இடங்களாகும். இவற்றில் நாகபர்வத மலையில் இராவணன் பெயர் குறிப்பிடப்படும் பிராமிக் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. இவ்வாறு இம் மலை, குடும்பிமலை ஆகியவை இராவணனின் ஆளுகைக்குட்பட்டு இருந்தமையால் சிவ வழிபாடும் அங்கு நிலவியிருப்பதற்கும் சாதகம் அதிகமாக இருக்க



வாய்ப்புள்ளது.

குடும்பி மலைப் பிரதேசம் இன்று அழிவடைந்த பிரதேசமாகவே விளங்குகின்றது. இம்மலைப் பிரதேசங்களை அண்டி வாழ்ந்தவர்களின் கருத்துப்படி இங்கு பெரிய சிவன் கோயில் இருந்ததாகக் கூறுகின்றனர். இங்கு அமைந்துள்ள உயரமான மலை உச்சியில் சிவலிங்கத்தின் வடிவில் ஓர் செங்கல் தூபி காணப்படுகின்றது. இது 10 அடி உயரமும் 15


நந்தியின் பாதமும், நதிக எனும் பெயரும் பொறிக்கப்பட்ட கல்வெட்டு

அடி விட்டமும் கொண்ட இத்தூபி சதுர வடிவில் அமைந்த மேடையின் மீது அமைக்கப்பட்டுள்ளது. இத்தூபி அமைப்பில் இலங்கையில் எந்த இடங்களிலும் பௌத்த தூபியைக் காணமுடியாதிருப்பதனால் இது சிவ வழிபாட்டின் குறியீட்டு அம்சமாகக் கருதிக் கொள்ள முடிகின்றது. இத்தூபி அமைந்துள்ள இடத்தின் அருகாமையில் மேலும் ஒரு சிறிய தூபி சதுர மேடையில் அமைந்துள்ளது. இவ்வாறு உள்ள தூபி சிவலிங்கமே ஆதிகாலத்தில் இராவணன் அரசனால் நிலைநிறுத்தப்பட்டு வழிபடப்பட்டு வந்த சிவன் கோயில் என்று அனைவராலும் இன்றும் கூறப்பட்டு வருகின்றது.

குடும்பி மலையில் கிடைத்துள்ள கல்வெட்டு ஒன்றில் சிவன் தொடர்பான பெயரும் கிடைத்துள்ளது. அதில் **"நதிக"** என்ற சொல் பொறிக்கப்பட்டிருப்பதோடு நந்தியின் பாதமும் வரையப்பெற்றுள்ளது. இதிலிருந்து அக்காலத்தில் தொன்மை மிகு சிவ வழிபாடு நிலவியிருப்பது தெளிவாகின்றது. பொதுவாகச் சைவர்கள் நந்தியை தெய்வமாகக் கருதி வழிபாடு செய்கின்றனர். சைவக் கொடிகளிலும் பொறித்துச் சிறப்பிக்கின்றனர். சிந்துவெளி காலத்திலும் இம் மரபு நிலவியிருந்துள்ளது. காளைகளின் உருவங்கள் பொறிக்கப்பட்ட முத்திரைகள் இதற்குச் சான்றாகும். இதேபோல் நந்தியின் பாதமும் குடும்பிமலையில் பொறிக்கப்பட்டிருப்பதால் வியப்பெதுவும் இல்லை.

குடும்பிமலையில் கிடைத்துள்ள இன்னுமொரு கல்வெட்டில் நாகவழிபாடு அங்கு நிலவியமைக்குரிய ஆதாரத்தைத் வெளிப்படுத்துகின்றது. சிவ வழிபாட்டின் அம்சமாகவே நாகவழிபாடும் பார்க்கப்படுகின்றது. சில குகைகளில் நாகவடிவம் சித்திரமாக வரையப்பட்டும் உள்ளது.

தற்போது இவ்விடம் பௌத்தர்களின் ஆதிக்கம் மிகுந்ததாகக் காணப்பட்டாலும், குடும்பிமலை இராவணன் வாழ்ந்த இராசதானி என்றும் அங்கு ஆவுடையார் அற்ற சிவலிங்கம் உள்ள சிவன்கோயில் ஒன்று இருந்துள்ளது என்பதையும் மறைக்க முடியாத உண்மையாக விளங்குகின்றது.

**பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை**
**ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்**
**கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது**
**நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே**

குறிப்பு - (என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்களின் தகவல் தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு என்ற நூலில் இருந்து சில தகவல்கள் பெறப்பட்டது. நன்றி)

**திருச்சிற்றம்பலம்**


உகந்தை மலையின் தோற்றம் (குடும்பிமலையில் இருந்து)

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

# ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்

**“சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்”**

### திருநாவலூரர் பரவையாரை சந்தித்தல்

திருநாவலூரர் தில்லை நீங்கியபின் திருஞானசம்பந்தப் பெருமான் திருவருள் பெற்ற திருக்கழுமலத்தினை அடைந்து ஆளுடைய பிள்ளையார் தோன்றிய அத்திருப்பதியின் எல்லையை மிதிக்க அஞ்சி அவ்வூரை வலமாக வரும்போது உமையம்மையோடு தோணியப்பர் அவருக்குக் காட்சி கொடுத்தருளக் கழிபேரன்போடு அம்மையப்பரைத் தாழ்ந்திறைஞ்சிக் கயிலையில் வீற்றிருந்தபடி கடவுளைக் கண்டு கொண்டேனென்று திருப்பதிகம் பாடினர். தோணியப்பர் மறைந்தருளவும் வெருக்கொண்டு தெளிந்து திருக்கோலக்காவினிற் சென்று திருப்பதிகம் பாடியருளினர். பின்னர்த் திருப்புன்கூர்ச் சிவலோகநாதரைப் பணிந்து பாடித் திருநீடூர் முதலிய தலங்களைக் கும்பிட்டுக் காவிரிப் பேராற்றில் மூழ்கித் திருமயிலாடுதுறை, திரு அம்பர் மாகாளம், திருப்புகலூர் முதலிய திருப்பதிகளைப் பணிந்து திருவாரூரை அணைந்தார்.



திருவாரூரில் வாழும் அடியார்கட்குச் சிவபெருமான் கனவிற் றோன்றி “நம் ஆரூரன் நாமழைக்க இங்கு வருகின்றான், அவனை நீங்கள் யாவரும் எதிர்கொள்ளுவீர்களாக” என்று பணித்தனர். சிவபெருமான் அங்ஙனம் பணித்ததைக் கண்டு வியப்புற்று அத்துணைப் பெருமையுடையவர் நமக்கெல்லாந் தலைவராவர் என்று நினைந்து திருத்தொண்டரெல்லாரும் தேவருலகம் நிலமிசை வந்தாற்போல அவரை எதிர்கொள்ளப் புறப்பட்டார்கள்! வீடுகளிலும், மண்டபங்களிலும், பெரிய கொடிகள் எடுத்தனர். நெடிய தோரணங்களும், கமுகும், வாழையும் அங்கங்கு நாட்டிய கால்களிற் கட்டிக் கடைவாயில் விளக்குகளும் வரிசையாக வைத்தார்கள். தெள்ளிய மணி தோறும் பொன்னினாலாகிய நிறைகுடமும் அழகிய மணி பதித்த திண்ணைகளிற் சந்தனக் குழம்பினால் மெழுகிக் குற்றமற்ற பொரியும் பொற்சுண்ணமும் முத்துமணிகளும் பரப்பி, நறுமலர்ப் பூம்பந்தர்களமைத்துத் திருவீதியின்கட் புழுதியடங்கப் பனிநீரைத் தெளித்தார்கள். இன்னிசைப் பாடல்களும், முகிலனைப் பேரிகை முதலிய இசைக் கருவிகளும் முழங்கவும், செங்கயல் போன்ற கண்களையுடையவராய் நயமிக்க நல்லணிகள் அணிந்த மகளிர் திண்ணை தொறும் நடம் பயிலவும், அடியாரெல்லாரும் திருவாரூர்த் திருமதிலுக்கு வெளியே சென்று சுந்தரமூர்த்தியை எதிர்கொண்டார்கள்.

எதிர்கொண்டவரை வணங்கி மிக மகிழ்ச்சியோடு திருவீதி வழியே செல்லும்போது திருத்தொண்டர்களை நோக்கி, **“எந்தையிருப்பதும் ஆரூர். அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்”** என்னும் முடிவுடைய சந்தவிசைத் திருப்பதிகம் பாடிக் கொண்டு நம் நாயனார் திருக்கோயிற்றிரு வாயிலையடைந்தனர். அவண் வானளாவிய திருவாயிலை ஐந்துறுப்பும் நிலத்திற்றோய வழிபட்டுத் தேவாசிரியன் மண்டபத்தையுந் தொழுது ஊனையும் உயிரையும் உருக்கும் பேரன்போடு சென்னிமேற் குவித்த கையராய்த் திருமூலத்தானத்தைச் சூழ்ந்த திருமாளிகை வாயிலையடைந்து புற்றிடங் கொண்டு பூங்கோயில் வீற்றிருந்து திருமகட்கு அருள்புரிந்த அண்ணலை மண்மிசை வீழ்ந்திறைஞ்சி ஐம்புலனும் ஒருங்கப்பெற்றும் பேரின்ப வெள்ளத்தின் மூழ்கி இன்னிசைப் பாமாலை இறைவருக்குச் சாத்தினர். அப்போது புற்றிடங் கொண்ட பெருமானார் திருவருளால் ஒரு மொழி யானது திருநாவலூரர் கேட்க எழுந்தது. “உனக்கு நம்மைத் தோழமையாகத் தந்தனம், நாம் உன்னைத் தடுத்தாட் கொண்ட திருமணத்தில் நீ கொண்ட கோலத்தையே எப்பொழுதும் உடையவனாய் நின் வேட்கை தீர மண்மிசை விளையாடுவாய்” என்றமொழியைக் கேட்ட வன்றொண்டார் இறைவன்பாற் கழிபெரு நன்றியுணர்ந்தவராய்ப் பன்முறை வணங்கி எழுந்து உள்ளக் களிப்போடு வெற்றி மிகுந்த காளைபோல் நடந்து வீதி விடங்கப் பெருமானைத் தொழுது திருக்கோயிலை

வலம்வந்து புறம்போந்தார். அன்று முதல் அடியார்கள் ளெல்லாரும் அவரைத் 'தம்பிரான் தோழர்' என்றனர். சிவ பெருமான் திருவருளினாலே தமிழ்நாவலர் பெருமானா-கிய சுந்தரமூர்த்தி அழகிய சைவ வேடந் தரித்துச் சந்தன-மும் முத்துமாலையும் மலர்மாலையும் முதலிய அலங்காரப் பொருள்கள் இலங்கும் திருமேனியுடையராய்த் தலைசிறந்த தவவேந்தராய்த் திகழ்ந்தனர். நாடோறும் அவர் புற்றிடங் கொண்டாரை வணங்கிப் பாடிச் சிவானந்தத்திற் றிளைத்துப் பெருமகிழ்வொடு செல்வாராயினர்.

இவர் இங்ஙனமிருப்பத் திருக்கயிலாயத்திலே உமையம்மைக் குச் சிறப்புப் பணிவிடை செய்யுஞ் சேடியருள் ஒருவராகிய கமலினி என்பாள் திருவாரூரிற் பிறந்தனள். சிப்பியினிடத்து முத்துப்பிறந்தாற் போல, அவள் உருத்திர பரவையாரென்னுந் திருநாமஞ் சாத்தப் பெற்றுச் சுற்றத்தாரால் கணிகையர் மரபிற் பிறந்து திருவாதிரை நாளன்று பெரியோராற் மிக்க கவலையோடு பாதுகாத்து வளர்க்கப்பட்டுச் செங்கீரை திரு மகளினும் அழகு மிக்காளாய் வளர்ந்து தளர்நடைப் பருவ முதலிய பருவங்கள் தோறும் விழாவணி செய்யப்பெற்றுத் மடைந்தாள். இளம் பெண்மானோ, விண்ணில் வளர்கின்ற உயர் மரத்தின் இள அரும்போ நறுந்தேனின் இளம்பதமோ, கடலிற் காணப்படும் பவளக்காட்டின் இளங்கொடியோ, ஒண்மதியில் ஓர் இளங்கலையோ, காமன் இளம்பருவத்தில் விற்களை பயிலுதற்குரிய ஒப்பற்ற இனிமையான ஒரு கருப்பு வில்லோ என்று சொல்லத்தக்க அவளுடைய அழகானது நாள்தோறும் வளர்ந்து பொங்கக் கழங்கும் பந்தும், அம் மனையும், ஊசலும் ஆகிய விளையாடல்கள் புரியுங் காலங் களில் இறைவியை மனம் உருகப்பாடுங் குறிப்புடைய வளாய்ப் பிள்ளைப் பருவமும், பேதைப் பருவமுங் கடந்து வனப்புமிக்க மங்கைப் பருவமடைந்தனள். உமையம்மை யாருக்குத் தோழியாயிருக்கப் பெற்ற நங்கையார், பாங்கிய ரோடு புற்றிடங் கொண்டாரை நாள்தோறுஞ் சென்று வணங்கி வருவாராயினர்.

ஒருநாள் அங்ஙனம் திருக்கோயிலுக்கு வழிபடப் புகும்போது பெருமானைத் தம் அடியவர்களோடு வணங்கி வருகின்ற திருவருளினாலே அப்பரவையாரைக் கண்டனர். கண்டவு டன் **"கற்பகமரத்தின் பூங்கொம்போ, காமன் மனைவியோ, அழகுறு நலத்திற்றோன்றிய நற்றவ வடிவோ, -கருமுகி லைச் சுமந்து வில்லையுடையதாய்க் குவளையும், பவளமும் மலர்களும் மலரப் பெற்றுத் திங்களும் அமையப்பெற்ற ஒரு நறுமணக் கொடியோ, இவையல்லாத வியப்பான பிறி தொன்றோ சிவனருளால் வந்த ஒரு வடிவமோ இன்ன தென்றறிய முடியவில்லை."** என்று வியப்புற்றார்.

வியந்து, **"அயன் கையாலெழுத முடியாமல் அவன் உள்ளத் தாற் படைத்தொரு மணிவிளக்கோ, மூவுலகிலுள்ளாருங் கண்டு களிப்படையத் தக்கதாய் என்முன் நின்றது யாதோ"** வெனத்திருநாவலூரரர் நினைந்தனர். தம் கண்கள் வியக்கும்படி பரவையார் சிவபெருமான் திருவருளால் நம்பியாரூரரைப் பார்த்து முன்வினை கூட்டுவிக்கக் களவுப் புணர்ச்சியைத் தாமும் விரும்பினவராயினர். பார்வைக்கு அடங்காத அழகு நிறைந்த சுந்திரமூர்த்திகளது திருமேனியானது வானிலடங்காத பேரொளிக் கதிர்வீச அவரால் எதிர்நோக்கப்பட்ட பரவை யார்க்கு அளவிடப்படாத காதலினால், இதுவரை இல்லாத ஒரு பெருவிருப்பானது அவரின் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் கீழ்ப்படுத்திப் பொங்கி மேலெழுந்தது. "எதிரிலே தோன்றுகின்ற அண்ணல் முருகக் கடவுளோ, ஒளியால் ஒப்பில்லாததொரு காமனோ, நன் மாலை யணிந்த மந்திரம் வல்ல ஒரு விண்ணவனோ, சிவபெரு மானது மெய்யருள் பெற்றவனோ, ஈடுபடாத என் மனத்தைத் தன் வயமாகத் திரித்த இவன் யாரோ?" என்று நினைத்தார். இங்ஙனம் எல்லையற்ற காதலினால் மகளிர் குணங்களெல்ல-ாம் மடங்கப்பெற்றாலுங் கடவுளைத் தொழும் அன்பானது அவரை யீர்த்து மேற்செலுத்தினமையாற் சிவபெருமானது திருக் கோயிலுட் புகுந்தனர். அதைக் கண்ட வன்றொண்டர் என் மனத்தைக் கவர்ந்த மயிற்சாயலும் கொவ்வைக் கனி போன்ற இதழும் உடைய இளங்கொடிதான் யாரென்ன, அப்போது அவரருகே நின்றவர்கள், **"இவர் பரவை என்னும் பெண்மணி, விண்ணவர்களும் நெருங்குதற்கு அரியவள்"** என்று தெரிவித்தார்கள்.

முற்பிறவியில் ஏற்பட்ட காதற்பான்மையாற் றொடக் குண்டு நம்நாயனார் சிவபெருமான் திருக்கோயிலுட் புகுந்-தார். அப்போது பரவையாருஞ் சிவபெருமானைக் கும்பிட்டு மீண்டு புறம் போந்தனர். நம்நாயனார் இறைவனை வணங்கி அவளைத் தமக்குத் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டு வெளியே வந்து, "என் இன்னுயிராம் அன்னம் போல்வாள் எவ்வழிச் சென்றா" ளென்று தேடுவாராயினர். மலப்பிணிப் பால் வரும் இருவினைத் தொடர்பொழிக்கப் பெற்றமை யால் இறைவன்பாற் செல்லும் என் அன்பினைய மேற்பட்டுச் செல்லும் வேட்கை விளைவிப்பதாய், மிகவும் பொங்கிவரும் ஒளியொடும் விளங்கி எனது உள்ளத்தை மயக்கிய சிவனா ரது திருவருள் எவ்வழிச் சென்றது? வானவர் தலைவரா கிய சிவபெருமானது திருவடி யல்லாது வேறொன்றையும் விரும்புமாறு அறியாத என்னை வருத்தமுறும்படி புதுமை யாக மயல் விளைத்துக் கற்பகக் கொடிபோல் நுடங்கிய எம்பிரானுடைய திருவருள் இப்போது பரமரின் திருவடி களை நெஞ்சார நினைத்திருக்கும் எனது எவ்வழிச் சென்றது? பந்தத்திற்கும் வீட்டிற்குங் காரணமாகிய உள்ளத்தை மயக்கி மான்போல் விழித்த எம்மிறைவரது திருவருள் எவ்வழிச் சென்றது?

"பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலுமோ ராசை யளிப்பதோர்
இப்ப தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய
ஈச னாரருளெந்நெறிச் சென்றதே.""

"உம்பர் நாயகர் தங்கழ லல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியி னொல்கியின்
றெம்பி ரானரு ளெந்நெறிச் சென்றதே."

"பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை யார்வர வுன்னுமென் சிந்தையை
வந்து மால்செய்து மானென வேவிழித்
தெந்தை யாரரு ளெந்நெறிச் சென்றதே."

இவ்வாறு கூறிக் காதன் மீக்கூர்ந்தவராய்த் தேவாசிரி யன் மண்டபத்தை ஒருவரோடும் உரையாடாது திருவாரூர் ஆண்டவர் பரவையைத் தமக்குக் கொடுத்துத் தம்முயிரைக் காப்பாற்றுவாரென்று கருதியிருக்கும் பொழுது கதிரவன் மறைந்தான்.

திருச்சிற்றம்பலம்

திருமலைச் சருக்கம் - (254 - 303)

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# திருவாசகத் தெளிவு -

# பிட்டமுது செய்தருளினான்!



இறைவன் அடியவர்களுக்கு எளியவன். அறிவின் உயர்வால் அவனை ஆய்வு செய்தால் அவன் அரியவன். பெருந்தவங்க-ளும் யாகங்களும் செய்து அழைத்தாலும் இலகுவில் காட்சி தராதவன். அடியவர் அன்பினுக்கு அழைக்காமலே அவன் வரும் பாங்கு பெருங்கருணையின் தனி வடிவமே!. இதனாலே தான்,

**"சான்று காட்டுதற்கரியவன் எளியவன்**
**தன்னை தன்னிலாமனத்தார்க்கு"**

என்கின்றார் சுந்தரமூர்த்தி நாயனார். நம்மில் பலர் யாத்திரைகள் செய்தும், தான தர்மங்கள் செய்தும், பெருங் கோயில்கள் அமைத்தும், ஞானியர்களையும் தவமுனிவர்க ளையும் தேடி நன்மைகள் செய்தும் அவர் வாய்மொழிகள் கேட்டும் கிட்டாத இறைவன், இவை எதுவுமே செய்யாது ஆணவ மலம் அழிக்க முனைந்து தன்முனைப்பு இல்லா திருக்கும் சிலருக்கு கிட்டிவிடுகின்றான்.

**"அற்புதன் காண்க அனேகன் காண்க**
**சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க"**

என வியந்து பாடும் மாணிக்கவாசகர், இறைவனைப் **"பத்தி வலையில் படுவோன் காண்க"** என்கின்றார். வலையில் மீன்கள் தாமாக வந்து சிக்கிக் கொள்வதைப்போல் இறைவ னும், பக்தி எனும் வலை விரித்து இருப்பவர்களிடம் தானா கவே வந்து அணைக்கின்றான். அவர்கள் எதைச் செய்தாலும் அதை அமோதிக்கின்றான். அவர்கள் எதைக் கொடுத்தாலும் அதனை அமுதாக ஏற்கின்றான்.

இளையான்குடிமாற நாயனாரின் கீரைக்கறியையும் நெல்லரிசிச் சோற்றையும், சிறுத்தொண்டரிடத்தில் பிள்ளைக் கறியையும், கண்ணப்பநாயனாரிடத்தில் பன்றிக் கறியையும் உண்ட இறைவன், வந்தியெனும் யாருமற்ற கிழவியிடத் தில் உதிர்ந்த பிட்டெல்லாம் வாங்கியுண்டு கூத்தாடி மகிழ்ந் தான் எனும் செவிவழிக் கதையும், திருவாசகச் சான்றும் எம் இறைவன் மக்கள் மயப்பட்டவன் என்பதை எமக்கு உணர்த்து கின்றது.

மண்சுமப்பதற்கு கூலியாய் பிட்டுக்கேட்ட பெருமான் இப்பெருவுலகைப் படைத்து, எம் வினைகள் கெடும்படி எம்மை சரியை, கிரியை முதலிய வகையில் ஒழுக இச் சரீரத்தை தந்ததற்கு கூலி கேட்டால் ஆன்மாக்கள் நிலை தான் என்னவாகுமோ?

நிற்க.

இறைவன் பெருங்கருணையினை வியந்து வியந்து உருகிப் பாடிய மாணிக்கவாசகர், கூலியாளாக வந்து வந்திக்கு உதவிய இறைவனை, பித்தனே என்று விளிக்கின்றார். நினைத்தமாத்திரத்தில் வைகையைப் பெருக்கெடுக்கச் செய்த பெருமானுக்கு நினைத்த பொழுதில் அதனை அடங்கும் படியாகச் செய்ய இயலாதா என்ன? தனியொருவனாய் பெரும் நாயகனாய் வீற்றிருக்கும் இறைவன், வந்தியின் பிட்டுக்கு ஆசை கொண்டானோ? என எண்ணும் வகையிலல்லவா, **"புவனியில் சேவடி தீண்ட"** மண்வெட்டியும், கூடையும் சுமந்து கூலியாளாக வந்தான்!

**"திண்போர் விடையான், சிவபுரத்தார் பேரேறு**
**மண்பால், மதுரையில் பிட்டமுது செய்தருளித்**
**தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட**
**புண்பாடல் பாடி நாம் புவல்லி கொய்யாமோ"**

என்கின்றார் மாணிக்கவாசகர்.

ஈரேழு உலகங்களும் கையேந்தி நிற்க சிவபுரத்தார் பேரேறாக வீற்றிருக்கும் பெருமான், ஒரு நாதியற்ற கிழவி யின் கொட்டிலில் தான் கையேந்தி நின்றான் எனில். அவன் திருவிளையாடல்களின் உச்சம் எதுவென்பதை நாம் அறிய, மாணிக்கவாசகரோ, அந்நிலை இறைவற்கு தன்னால் நேர்ந்-ததே என எண்ணி எண்ணி உள்ளுருகி உருகிப்பாடுகின்றார்.

**"நம்மையும் ஒரு பொருளாக்கி**
**நாய் சிவினை ஏற்றுவித்த**
**அம்மையெனக் கருளியவா**
**நார் பெறுவார் அச்சோவே"**

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. சிவ செந்தமிழாதன்**
**இளம்புலவர் - தென்னாடு**
**(முதுமாணி - சைவசித்தாந்தம்)**




# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# பெருஞ்சிவனிரவு நோற்போம்!

இன்று பலர் சிவனிரவு விழா எனக் கொண்டாடுகின்றனர். அதில் தவறு ஒன்றும் இல்லை. எனினும் சிவனிரவு அன்று சைவ எழுச்சிக்கான விழாவைக் கொண்டாடலாமே தவிர, சிவனிரவு என்பது விழா அல்ல! அது, மனதைக் கட்டுப்படுத்தும் பெரும் விரதம் என்பதை நாம் உணர வேண்டும். அதனால், இதைக் கொண்டாடுகிறோம் என்று சொல்வதை விட, நோற்கின்றோம் எனச் சொல்வதே சரியானது!

சிவனிரவு என்றால் பட்டினி கிடப்பது, கண்விழிப்பது, கோயிலுக்குப் போவதுடன் நின்று விடாமல், இதன் தத்துவம் உணர்ந்து இவ்விரதத்தை நோற்றால், இலகுவில் முத்தியின் தளத்தில் ஏறி நாம் பயணிக்கத் தொடங்கலாம்.

மனித மனம் குரங்குக்கு ஒப்பானது. அது நிலையின்றிக் குதிக்கும். நோக்கமின்றி எங்கும் எதிலும் தோய்ந்து கிடக்கும். மீண்டெழும், மறுபடி தோய்ந்து போகும். மனித மனம், ஒரு நிலைப்பட தியானம் அவசியம். அலைபாயும் மனதை, சிவத்தின் மீது வைத்து, எங்கும் போகாமல் கட்டிப் போட வேண்டும். அப்படி கட்டிப் போட்டாலும், மறைமதிக்கு முந்தைய நாள், சந்திரனின் சிறு கீற்றுப் போல, மனதின் ஏதோ ஒரு மூலையில் முந்தைய ஆசை எண்ணங்களின் சிறு வடிவம் புதைந்து தான் இருக்கும். அதையும் ஒழித்தால் தான், நாம் பிறவியிலிருந்து விடுபட்டு சிவனை அடையமுடியும். அதற்காக சிவனை வழிபடும் நாளே சிவனிரவு. இந்த தத்துவத்தை உணர்த்தத்தான், சிவனை இலிங்க வடிவில் படைத்தனர் நம் முன்னோர். இலிங்கத்தின் பாணம் ஏறத்தாழ முட்டையின் வடிவில் இருக்கும். ஒரு முட்டை படம் வரையுங்கள். அதற்கு முதலும் இல்லை, முடிவும் இல்லை. சுற்றிச் சுற்றிபோய்க் கொண்டே இருக்கும். அதே போன்றுதான் சிவனும், முதலும், முடிவும் இல்லாதவர்.

ஆன்மாக்களுக்கு அப்படி இல்லை. நமக்கு பிறப்பு என்னும் முதலும், மரணம் என்னும் முடிவும் இருக்கிறது. இது, நாம் செய்யும் நல்வினையும் தீவினையும் பல பிறவிகளைத் தருகின்றன. சிலர் ஏழு பிறவி என்று மனிதர்களுக்கு கணக்குச் சொல்வர். ஆனால் 'எழுபிறவி' என்பதே சரி! நம் பாவக்கணக்கு கரையும் வரை, மீண்டும் மீண்டும் பூமியில் எழுந்து கொண்டே இருப்போம். பிறவிச் சூழலில் இருந்து விடுபட ஏதாவது வழியிருக்கிறதா என்றால், இருக்கிறது. அதற்கு ஒரு மந்திர வார்த்தையைச் சொல்லியிருக்கின்றனர் முன்னோர். அதுதான், 'அன்பே சிவம்!' பிற உயிர்களையும் தம்மை போல கருதி அன்பு செலுத்த வேண்டும். இவ்வன்பு செலுத்துதலின் அடிப்படையே சிவவழிபாடு என நாம் உணரல் நன்று.

எனவேதான் சிவன் இடத்தில் எம் மனதை ஒடுக்குவதற்காக எம்மனம் இயல்பாகவே அலைபாய்கின்ற நாட்களாக கருதப்படுகின்ற, நிறைமதி மற்றும் மறைமதி தினங்களில் பெருவிரதங்களை நோற்று இறைவனிடத்தில் மனதை ஒப்புவித்து நாம் முத்தியின் பொருட்டு விளைகின்ற விதமாகவே நம் முன்னோர்கள் பெருஞ்சிவனிரவு விரதத்தைக் கடைப்பிடித்து எமக்கு கையளித்தனர். எனவே இச்சிவனிரவு விரதத்தில் எம் மனம் மொழி மெய்யினால் இறைவனிடத்தில் அன்பு செலுத்தி அதை ஒரு பெருவிழாவாக கொண்டாடுகின்ற அதேவேளை நம்மனதை ஒருநிலைப்படுத்தும் ஒரு விரதமாகவும் நாம் நோற்க வேண்டும்.

இளைய சைவப் பிள்ளைகள் மனதில் சிவம் பற்றிய சிந்தனைகளை விதைக்கும் நல்ல கருத்து மேடைகள் அந்நாள் முழுவதும் ஏற்படுத்தப்பட்டு சிவ மேன்மை சித்தாந்தச் சிறப்பு சொல்லப்படல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல ஈழத்தில் மட்டுமல்ல உலகெல்லாம் இருக்கின்ற சைவத்தமிழ் பாடசாலைகளில் இரவு முழுவதும் இப்பெருவிரதம் விரதமாகவும் விழாவாகவும் மாணவர்களிடத்தில் சைவ எழுச்சியை ஏற்படுத்துவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். சைவப் பெரியவர்கள் இதற்குப் பங்களிக்க முன்வரவேண்டும்.

வீடுகளில் அவமே கிடந்து திரைப்படங்களையும் தொடர் நாடகங்களையும் கண்டு இணைய முடக்கத்துள்ளிருக்கும் எம் இளைய தலைமுறையை மூடி இருக்கும் இருள் கிழித்து சிவமெனும் பெருஞ்சோதி காணச் செய்வோமாக!

திருச்சிற்றம்பலம்

# ‘பெருஞ்சிவனிரவு’ இம்முறை மாசித் திங்கள் 14ம் நாள் (பெப் 26) தேய்பிறை பதினான்மைப் பிறைநாளில் கொண்டாடப்படவிருக்கிறது



சிவனிரவு (சிவராத்திரி) என்பது ஒவ்வொரு திங்களும் (மாதமும்) வருகின்ற தேய்பிறை பதினான்மைப் பிறை (சதுர்த்தசி) நாளாகும். இது நிலவின் இயக்கத்தில் மறைமதி நாளுக்கு (அமாவாசைக்கு) முதல் நாள் விரதமிருந்து கொண்டாடப்படுகிறது. மாசி திங்களில் வருகின்ற சிவனிரவு மிகவும் சிறப்பானது அதனால் அது மகாசிவனிரவாகக் கடைப் பிடிக்கப்படுகிறது.

சிவனிரவுக்கான விளக்கங்கள் பல வகையாகவுள்ளன. சமய வழியில் ஒரு விளக்கம், அறிவியல், புராண, மருத்துவ மற்றும் வாழ்வியல் வழிகளில் பலவிளக்கங்கள் உண்டு. ஆனால் சைவத் தமிழனின் ஆழ்ந்த அறிவியலுக்கும் சமய நெறிக்கும் முழுமையான தொடர்புகள் உண்டு. அண்டத்தில் இருப்பதுதான் பிண்டத்திலும் இருக்கிறது என்ற அளப்பரிய கொள்கை விளக்கங்களை எமது சைவநெறி பலவிடத்தில் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

மனித மனத்தின் மாற்றமும் நிலவின் மாற்றமும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டது என்பது தமிழரின் ஆழ்ந்த அறிவியல். நிறைமதியில் இருந்து நிலவு மறைமதியாகும் போது மனதில் பலமாற்றங்கள் நடைபெறுகின்றன. மேலும் மறைமதி நாளில் (அமாவாசை) சொல்லுக்கேற்றாற் போல் மறைமதி, மனதை மறைத்து, சிந்தனைத் திறனைக் குறைத்து பலவீனமாக்கும் தன்மைகளும் உண்டு. இதனாலே மறைமதிக்கு முன்னிரு நாட்களும் சிவபூசைக்குரிய கழுவாய் (13ம் நாள்) (பிரதோஷம்) மற்றும் சிவனிரவாகக் (14ம் நாள்) கடைபிடித்தனர் ஆதித்தமிழர்கள்.

பெருஞ்சிவனிரவிற்கு இரண்டு புராணக்கதைகள் உள்ளன. ஒன்று வேடன் ஒருவன் புலிக்குப் பயந்து மரத்துக்கு மேலே ஏறி அமர்ந்திருந்ததும், அது வில்வ மரம் என்பதும், தூக்கம் வராமல் இருக்க ஒவ்வொரு இலையாகப் பறித்து கீழே போட்டுக்கொண்டிருக்க, அது கீழே இருக்கும் சிவலிங்கத்தில் விழுந்ததனால், அவனுக்கு சிவனின் அருள் கிடைத்தது, அதுவே பெருஞ்சிவனிரவு (மகா சிவராத்திரி) எனக் கொண்டாடப்படுகிறது. மற்றது மாலும் அயனும் அடிமுடி தேடிய கதை. அடிமுடி தேடியவர்களுக்கு மாசித் திங்கள் தேய்பிறை பதினான்காம் நாள் திங்கட்கிழமை திருவோணம் கூடிய நன்னாளன்று திருக்காட்சி கொடுத்து மறைமதி அண்டிய நாளினால் மனம் குன்றி திருமுடியைக் கண்டதாகப் பொய் கூறிய பிரமனுக்குத் தண்டனையும் உண்மை கூறிய திருமாலுக்கு காத்தல் என்னும் அரும்பணியையும் கொடுத்தான் ஈசன் என்பதும் வெளிப்படை. இத்தினத்தில் பரமசிவன் மகேசுவராக மாறிக்காட்சி கொடுத்ததால் இந்த இரவு, பெருஞ்சிவனிரவாக மாறியது.

திங்கள் தோறும் வரும் சிவனிரவில் நடுச்சாமம் (இரவு 12.00 மணி) வரை விழித்திருந்து ஈசனை நினைத்து பூசை வழிபாடுகள் மேற்கொள்வார்கள். அதற்குப்பிறகு ஓய்வு எடுப்பார்கள். இவ்வாறாக சிவனிரவில் பூசையினை மாமாங்க வழிமுறையாக செய்து வந்து 12வது திங்கள்வருகிற பெருஞ்சிவனிரவில் (சூரியன் சந்திரனின் வீட்டுக்கு எட்டாவது வீட்டில் வரும் காலம், மாசித் திங்கள்) அன்று இரவு முழுவதும் கண்விழித்து ஈசனை மனதில் நிறுத்தி சிவபூசையினைச் செய்து மாமாங்க பூசையினை நிறைவு செய்வார்கள் சிவனடியார்கள்.

பெருஞ்சிவனிரவு அன்று அடியார்கள் விரதமிருந்து, நான்கு சாமங்களும் கண்விழித்து , சிவபூசை செய்து, சிவனுக்கு மங்கல நீராட்டி, தூபம்தீபம் காட்டி, சிவ சிந்தனையில் திளைத்து, தேவாரத் திருமுறைகள், சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல் போன்ற திருப்பாடல்களைப் பாடி, சிவன்கோயில்களுக்கு சென்று வழிபட்டு காளியாட்டம் இல்லது திருவருள் துணையுடன் அருள்வேண்டி வழிபடுவதே சாலச்சிறப்பு.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**



# Sydney Tamil Youth Leadership Workshop



Recently Aram Foundation Australia & Thennadu, Senthamil Agama Sivamadam jointly hosted an enlightening Tamil Youth Leadership Workshop titled Self-Realization as the Foundation of True Leadership, in Sydney led by esteemed scholar Dr. Sivakumar Ramakrishnan & Mr.G.Partheepan. This initiative aimed to inspire young Tamil leaders by integrating self-leadership qualities with an understanding of Tamil heritage, philosophy, and scientific traditions.

Dr. Sivakumar, a Senior Lecturer in Mathematics at the Malaysian Science University, is renowned for his contributions to mathematical modelling, Tamil linguistic studies, and Agamic sciences.

The workshop covered a wide range of topics, including self-leadership and self-realization, which focused on developing resilience and clarity in handling future challenges. Participants explored the concept of Tamilar Non-Delusive Legacy and History, gaining insights into the authentic historical contributions of Tamil civilization. G. Partheepan delivered a motivational speech on cultural influences among youth and the next steps forward.

Dr. Sivakumar's visit was a significant step in fostering a renewed appreciation for Tamil traditions among the younger generation. The workshop reinforced the idea that true leadership emerges from self-realization, cultural awareness, and a deep understanding of one's roots. Special thanks to Mr. K. Sutharman, proprietor of KST Spice Corner, for sponsoring this event, and to Mr. S. Jeyananthan for sponsoring the lunch on both days.





# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு முருகுவளர்கோதை உடனுறை கண்ணாயிரநாதர் - கண்ணார்கோயில் (குறுமாணக்குடி)

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 17ஆவது திருக்கோயில் கண்ணார்கோயில் (குறுமாணக்குடி)






**"கண்ணார் கோயில் கைதொழுவோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகுந் நல்வினையாய நணுகும்மே"**

மூவடி மண் இரந்து பெற்று உலகளந்த திருமாலும் தேவர்களின் தலைவரான இந்திரன் பெருமானும் வழிபட்டு பேறுற்ற அற்புதத் தலமே கண்ணார்கோயில் அருள்மிகு முருகு வளர்கோதை உடனுறை கண்ணாயிரநாதர் திருக்கோயில்.

**அமைவிடம்: நாகப்பட்டினம், தமிழ்நாடு.**

மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை - சீர் காழி சாலை வழியில் மயிலாடுதுறையில் இருந்து சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. கதிரா மங்கலம் எனுமிடத்திலிருந்து வலப்புறமாக சுமார் மூன்று கிலோமீட்டர் தொலைவிலுள்ளது.

**இறைவர் திருப்பெயர்: கண்ணாயிரமுடையார், கண்ணாயிர நாதர், சகசுரநேத்திரேசுவரர்.**
**இறைவியார் திருப்பெயர்: முருகுவளர்கோதை, சுகந்தகுந் தளாம்பிகை.**
**கோயில் மரம்: சரக்கொன்றை**
**தீர்த்தம்: இந்திர தீர்த்தம்.**
**வழிபட்டோர்: சம்பந்தர், சேக்கிழார், இந்திரன், திருமால் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.**
**பாமாலை: சம்பந்தர் , சேக்கிழார்.**

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**
**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

**தண்ணார்திங்கட் பொங்கரவந்தாழ் புனல்சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன் பிரியாத
கண்ணார் கோயில் கைதொழுவோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகுந் நல்வினையாய நணுகும்மே (1-101)**

**சேக்கிழார் பெருமான் பாடற்குறிப்பு**

**திருமறைச் சண்பைய ராளி
சிவனார் திருக்கண்ணார் கோயில்
பெருவிருப் பாலணைந் தேத்திப்
பிஞ்ஞகர் கோயில் பிறவும்
உருகிய அன்பால் இறைஞ்சி
உயர்தமிழ் மாலை கொண் டேத்தி
வருபுனற் பொன்னி வடபால்
குடதிசை நோக்கி வருவார் (12-28-285)**

**திருத்தலச் சிறப்பு**

திருமாலும், இந்திரனும் வழிபட்டு பேறு பெற்ற அற்புத தலமாகிய கண்ணார் திருக்கோயில் மூலவர் தான்தோன்றி அம்சமாகத் திகழ்கின்றார். பெயருக்கேற்பத் திருமேனி முழுவதிலும் கண்கள் போன்று பள்ளம் பள்ளமாக உள்ளன. திருமணமாகாதோர் இங்கு வந்து சுவாமிக்கு மாலை சார்த்தி வழிபடுதலும், அவ்வாறு வழிபட்டோர் திருமணத்திற்கு பிறகும் இங்கு வந்து மாலை சார்த்துதலும் மரபாக உள்ளது.

மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்ட வாமன மூர்த்தியாகிய குறுமாணி (திருமால்) வழிபட்டதால் இத் தலம் **"குறுமாணக்குடி"** எனப்படுகிறது.

**திருத்தல வரலாறு**

தேவர்களின் தலைவனான இந்திரன், கவுதம முனிவரின் மனைவி அகலிகை மீது ஆசை கொண்டான். ஒரு முறை முனி வரை வெளியே அனுப்பிவிட்டு, அகலிகையுடன் இன்பமாக இருப்பதற்காக சூழ்ச்சி செய்தான். எனவே இந்திரன், முனி வரின் வடிவம் எடுத்து அகலிகையை பார்க்க சென்றான்.



வந்திருப்பது தன் கணவர் அல்ல என்பது தெரிந்தும், இந்திரன் மீது கொண்ட ஆசையினால் தவறு செய்ய தானும் சம்மதித்தாள்.

இதற்குள் முனிவர் திரும்பி வர, இந்திரன் பூனை வடிவமெடுத்தான். அகலிகை பயந்து நின்றாள். நடந்ததை அறிந்த முனிவர் கோபம் கொண்டு, இந்திரன் உடல் முழுவதும், ஆயிரம் பெண்களுக்கான பெண் உறுப்பு உண்டாகும் படி சபித்தார். அதன் பின் அகலிகையை கல்லாகும் படி சபித்து விட்டார். தவறை உணர்ந்த அகலிகை சாப விமோசனம் கேட்க, **"இராமரின் திருவடி பட்டதும் சாப முத்தி கிடைக்கும்,"** என்றார் முனிவர். இந்திரன் தனக்கு ஏற்பட்ட இந்த துன்பத்திற்கு நிவர்த்தி வேண்டி நான்முகனுடன் சென்றான்.

அதற்கு நான்முகன் குறுமாணக்குடி சிவனை வழிபட்டு சாப முத்தி பெற வழி கூறினார். இந்திரனும் இத்தல தீர்த்தத்தில் நீராடி சிவனை வழிபட, அவனது ஆயிரம் குறிகளும் ஆயிரம் கண்களாக மாறி, இறைவன் ஏற்றுக்கொண்டார். இந்திரனின் சாபம் தீர்ந்தது. எனவே இத்தல இறைவன் **"கண்ணாயிரமுடையார்"** ஆனார்.

### திருக்கோயில் அமைப்பு

இராசகோபுரமில்லை. கட்டைக்கோபுர வாயிலின் முகப்பின்மேல் இடபவடிவினர், விநாயகர், வள்ளி தெய்வயானை உடனுறை சுப்பிரமணியர் உருவங்கள் வண்ணத்தில் அமைக்கப்பட்டுள்ளன. உள்நுழைந்ததும் நீண்ட கல் மண்டபம் அழகாகவுள்ளது. வெளி வீதியில் சந்நிதிகள் எவையுமில்லை. வாயிலின் ஒரு புறம் குடவரை விநாயகரும் மறுபுறம் தண்டபாணியும் காட்சி தருகின்றனர்.

செப்புக் கவசமிட்ட கொடிமரம், கொடிமரத்து விநாயகர், நந்தி பலிபீடங்கள் உள்ளன. உள்மண்டபத்தில் தென்முகக்கடவுளை அடுத்தாற்போல் சித்திவிநாயகர் சந்நிதி தனிக்கோயிலாகவுள்ளது. வீதியில் நால்வரையடுத்து, கன்னி விநாயகர் உள்ளார். ஆறுமுக சுவாமி இடத்தில் திருமகள் சந்நிதி உள்ளன. கொடிமரத்தை வலம் வந்து மேலே சென்றால் மண்டபத்தின் வலப்பால் பள்ளியறையும் பக்கத்தில் அம்பாள் சந்நிதியும் உள்ளன. தெற்கு நோக்கிய சந்நிதியில் அம்பாள் நின்ற திருக்கோலம். பெயருக்கேற்ற அழகு வடிவம். அம்பாள் சந்நிதிக்கு வெளியே மண்டபத்தில் மேற்புறத்தில் பன்னிரண்டு இராசிகளின் உருவங்களும் உரிய கட்டமைப்பில் வடிக்கப்பட்டுள்ளன.

மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கியது. சுயம்புத் திருமேனி மூலலிங்கம் - சற்று உயரமாக உள்ளது. பெயருக்கேற்பத் திருமேனி முழுவதிலும் கண்கள் போன்று பள்ளம் பள்ளமாக உள்ளன. இந்திரனின் சாபம் இங்கு நீங்கியதாக தொன்நம்பிக்கை. ஆதலின் திருமணமாகாதோர் இங்கு வந்து சுவாமிக்கு மாலை சார்த்தி வழிபடுதலும், அவ்வாறு வழிபட்டோர் திருமணமான பின்னரும் வந்து மாலை சார்த்துதலும் இங்கு மரபாக இருந்து வருகின்றது.

மூலவர் மண்டபத்தில் சந்திரசேகரர் திருமேனி உள்ளது. அடுத்து அம்பலவாணர் அருட்காட்சி. கழுவாய் நாயகர், அத்திரதேவர், சண்டசுவரர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, அம்மையப்பமுருகர் (சோமாஸ்கந்தர்) விநாயகர் முதலிய எழுந்தருளல் திருமேனிகளாய் உள்ளன.

சுற்றுத் திருமுன்களாக நாட்டிய விநாயகர், தென்முகக் கடவுள், பெருசோதியான், நான்முகன், மலைமகள் உளர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. கோயிலின் எதிரில் உள்ள தீர்த்தக் கரையில் விநாயகர், முருகன் சந்நிதிகள் உள்ளன.

கார்த்திகை ஞாயிறு நாள்களில் சுவாமி புறப்பாடு இங்கு விசேடமாக நடைபெறுகிறது. இங்குள்ள அம்மன் சந்நிதி விசேடமானது, பிரதானமான தெய்வமாகப் போற்றப்படுகின்றது. சுவாமிக்குத் தீப வழிபாடு செய்து அடுத்து அம்பாளுக்கும் தீப வழிபாடு செய்து அதற்குப்பிறகே திருநீறு குங்குமம் வழங்கும் மரபு இக்கோயிலில் இருந்து வருகின்றது.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**


பவானி சிவ
அ.வேலுச்சாமி

**பாடல் - 03**

**நிலவு மெண்ணில் தலங்களும் நீடொளி**
**இலகு தண்டளி ராக வெழுந்ததோர்**
**உலக மென்னு மொளிமணி வல்லிமேல்**
**மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை**


**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**

**பொருள் -** நிலைத்து நின்றுள்ள அளவில்லாதவனாகிய தலங்களைத் தனது ஒளி வீசி விளங்கும் குளிர்ந்த தளிர்களாகக் கொண்டு முளைத்து எழுந்ததாகிய உலகம் என்கிற ஒப்பற்ற ஒளிவீசும் அழகிய கொடியின் உச்சியிலே பூக்கின்ற வெள்ளைப் பூப்போன்றுள்ளது அப்பெரிய திருமலை.

**வி உரை -** நிலைபெற்ற பல தலங்களையும் தளிர்களாகக் கொண்டு தழைத்துப் படர்வது உலகமாகிய கொடி. அக் கொடியின் உச்சியில் பூக்கும் வெண்மலர் போன்றது திருக்கயிலைமலை என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் கூறியுள்ளார்கள்.

கொடிப்பூவாகியஒருவெண்பூவைஅடைய விரும்பியவன் அதனைப் பூக்கின்ற கொடியைச் சார்ந்து அதைத் தழைத்துப் படரச் செய்து காத்து அதன் பின் முடிவில் எவ்வாறு பூவைக் பெறுவானோ, அதுபோல, உயிர்கள் தாம் சேர வேண்டிய இடமாகிய திருக்கயிலையை அடைய வேண்டினால், ஞாலத்தை நயந்து, அதில் பல தலங்களைத் தரிசித்து முடிவில் திருமலையை அடையலாம் என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் உரையில் அருளியுள்ளார்கள்.

**வெண்மலர்**

கயிலை, அத்தளிர்களை முன்னாகக் கொண்டு நிரந்தர வாசத்தலமாய் இறைவன் இருப்பது. மலையின் நிறம் பற்றி வெண்மலர் என்றார். **"வடபால் கயிலையும் தென்பால் நல்லூரும் தம் வாழ்பதியே (அப்பர் தேவாரம் புவனியில் போய்ப் பிறவாமையின் நாள் நாம் போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறு"** (திருவாசகம்) உலகில் செய்யும் எல்லாச் சிவ தருமங்கரும் எல்லாத் தல வழிபாடுகளும் இத் திருமலையினைப் பெறும் பொருட்டேயாம் என்பது துணிபு. அப்பர் சாமிகள் பல தலங்களையும் வழிபட்டுப் படர்ந்து முடிவிலே திருக்கயிலை யாத்திரை செய்து வழிகாட்டியதும் இக்கருத்துப் பற்றியே என்க.

**திருமலைச்சிறப்பு பாடல் - 4**

**மேன்மை நால்மறை நாதமும் விஞ்சையர்**
**கான வீணையின் ஓசையும் கார்எதிர்**
**தான மாக்கள் முழக்கமும் தாவில்சீர்**
**வான துந்துமி ஆர்ப்பும் மருங்கெலாம்**

**பொருள் -** மேன்மைதரும் நால்வேதங்களுடைய நாதமும் வித்தியாதர முதலியோர் கானங்களினாலும் வீணைகளினாலும் செய்கின்ற ஓசைகளும், மேகங்களும் யானைக் கூட்டங்களும் ஒன்றற்கொன்று எதிராகச் செய்யும் முழக்கங்களும், குற்றமில்லாத சிறப்புடைய ஆகாய துந்துபிகளின் முழக்கங்களும் அதன் பக்கங்களில் எல்லாம் நிறைந்துள்ளன.

**வி-உரை -** மேன்மை நான்மறை நாதம் - சத்தங்கள் இருவகைகப்படும். ஒலி எனப்படும் பொருளுடைய சத்தம், இசை எனப்படும் பொருளில்லாத சத்தம். முன்னையது சுத்தமாயையிலிருந்து பின்னையது அசுத்த மாயையின் பரம்பரையில் தோன்றிய ஆகாயத்திலிருந்து பிறக்கும் என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் உரையில் குறிப்பிட்டு உள்ளார்கள். "ஓசை, ஒலி

எலாம் ஆனாய் நீயே" என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம்.

**"அரவொலி ஆகமங்கள் அறிவாரறி தோத்திரங்கள் விரவிய வேதவொலி விண்ணெலாம் வந்து எதிர்ந்திசைப்ப"**

என்பது நம்பிகளின் நொடித்தான்மலைத் தேவராம்.

விஞ்சையர் கானம் முதலிய பல வித்தைகளிலும் வல்ல தேவக்கூட்டத்தார். துந்துபி ஐவகை தேவவாத்தியங்கள் கயிலாயத்தில் தானே முழங்குவது போலக் காளத்தியிலும் மதியம் உச்சிவேலையில் அந்த ஓசை எழுந்ததாகச் சேக் கிழார் பெருமான் காட்டுகிறார்.

**"கடவுள் மால் வரையின் உச்சி,**
**அதிர் தரும் ஓசை ஐந்தும் அஞ்சலி முழக்கம் காட்ட"**

இந்த ஓசையைக் கேட்ட திண்ணனார் நாணனிடத்தில் **"இது என்கொல் நாணா"** என்று வினவ நாணன்

**"இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து மதுமலரி ஈக்கள் மொய்த்து மருங்கு எழும் ஒலிகொல்"**

என்றான் நாணன் திண்ணனாரிடத்தில் இந்த ஓசை இம் மலையில் உள்ள தேனீக்களின் ஓசை என்ற அவனுக்கு அறிந்த வகையில் கூறுகிறான் உச்சிவேளையில் கயிலையில் எப் படித் தேவர்கள் பெருமானை வழிபாடு செய்வார்களோ அதேபோல் காளத்தியிலும் தேவர்கள் வழிபாடு செய்வார்கள்.

திருமலையில் தேவர்கள் வணங்கிச் சூழ்கின்ற கிரீட வரிசையும் கற்பக மலர்களால் கட்டப்பட்ட பொன் இழைகள் கூடிய பூமாலைகளும் முனிவர்களும் அங்குக் கும்பிட்டு வரிசையில் நிறைந்துள்ளனர்.

சிவகணங்களாகிய பூதங்களும் அங்குப் பெருமானை வழிபாடு செய்யக் காத்திருந்தன. இப்புராணத்தில் பேசப்பெறும் அடியார்களும் சிவபெருமானது அருள்வழிநின்று திருக் கயிலையில் கணங்களாகவும் நாயகர்களாகவும் பெற்றார்கள்.

**"தூநறுங்கொன்றை முடியவர் சுடர்நெடும் கயிலைமால் வரையெய்தி மான நற்பெரும் கணங்கட்கு நாதராம் வழித்தொண்டின் நிலைபெற்றார்" - (சேரமான் பெருமான் நாயனார்)**

சிவபூதகணங்கள் பெருமானை அனுபவித்திருக்கும் சிவானந்த மேலீட்டில் மெய்ப்பொருள்கள்

**"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத் தேடுவதும் நின் அன்பர் செய்கை பராபரமே"**

என்பது தாயுமானவர் திருவாக்கு.

**பாடல் - 7**

**நாயகன் கழல் சேவிக்க நான்முகன்**
**மேய காலம் அலாமையின்மீணடவன்**
**தூய மால்வரைச் சோதியில் மூழ்கிஒன்று**
**ஆய அன்னமும் காணாது அயர்க்குமால்**

**பொருள்** - இறைவனின் திருவடிகளைச் சேவிக்கச் சென்ற பிரமதேவர் அப்போது அதற்கு உரிய காலமல்லாத காரணத் தால் திரும்பி வந்து, கயிலைமலையானது வெள்ளிய பேரொளி யிலே மறைந்து வேறு காணப்படாத தன் ஊர்தியாகிய அன்னப்பறவையை வேறு பிரித்துக் காணமுடியாமல் வருந்து வார்.

**வி-உரை** - நாயகன் தலைவன் இங்கு எல்லார்க்கும் தலை வராகிய சிவபெருமானை உணர்த்திற்று.

**காலம் அலாமை :** இறைவனைச் சேவித்தலுக்கு உரிய காலமல்லாததால் இறைவனை சேவிப்பதற்கு அடியவர்கள் அல்லாதார்க்கு ஒவ்வொரு கால வரையறுக்கப் பெற்றுள்ளது. அடியவர்கள் எப்போதும் பணி செய்ய உரியவர்கள், "இகத்தும் பரத்தும் இனியாரைக்காணேன் (சிறுத்தொண்டர்புராணம்) பெருமானுக்கு இனியவர்கள் அடியவர்களே.

**அன்னமுங்காணாது :** நாயகனைக் காணப்பெறாமையுடன் வாகனமாகிய அன்னமும் காணப்பெறாது என உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை.

**தூயமால் வரைச் சோதி :** தூய்மை வெண்மையின் குறிப்பு. அது "வெண்திரு நீறு புனைந்தன" என்ற தானாலும் காணப்படும்.

**மூழ்கி ஒன்றாய :** மலையின் வெள்ளிய ஒளியினும் பொருந்தி தனித்து வேறாகக் காணமுடியாதிருத்தல். பொருள் இரண்டாயினும் ஒரு தன்மைப்படுதலே ஒன்றாதல் எனப்பட்டது. கண் ஒளியும் சூரிய ஒளியும்போல் ஒன்றித் துக் கலத்தல். இதனையே பெரியோர் அத்துவிதக் கலப்பு என்பர். ஆன்மாக்களைத் தனது அருட்சோதியிலே இரண்டறக் கலக்கும்படி செய்வான் இறைவன். அவனது திருமலையும் அத்தன்மை பெற்றது என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் உரைக்குறிப்பிலே கூறியுள்ளார்கள்.

மால்வறை பெரியமலை, விட்டுணு போன்ற மலை என்றும் ஆம் மாலே ஆகிய மலை என்றும் உரைப்பர் திருமால் சிவ பெருமானை இடபமாகத் தாங்கி நின்றமை புராணத்துட் கேட்கின்றோம்.

**"தடமதில்கள் அவை மூன்றும் தழல் எரித்த அந்நாளில்**
**இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ" (திருவாசகம்)**

சோதியின் மூழ்கி ஒன்றாய **"கனகமலை அருகே போயின காக்கையும் அன்றே படைத்தது பொன்வண்ணமே"** என்பது பொன்வணத்தந்தாதி. காக்கையின் கருமையாகிய வேற்று நிறமும் மாற்றப்பட்டு பொன்வண்ணமாகும் என்றால் வெள்ளிய தூய ஒளியில் அவ்வெள்ளை நிறமாகிய அன்னம் மூழ்கி வேறாகப் புலப்படாமை பொருந்துவதாம் என்க .

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# பாராளுமன்ற பொங்கல் – பாராட்டும் கௌரவிப்பும்



தமிழ் மரபுத் திங்கள் ஆகிய தைத்திங்களில், முதன் முறையாக இலங்கை பாராளுமன்றத்தில் தைப்பொங்கல் விழா இனிதே நடைபெற்றிருக்கின்றமை தமிழர்கள் அனைவருக்கும் பெருமை சேர்த்திருக்கிறது. பாராளுமன்ற பொங்கல் கருப்பொருள் கனவிலும் பின்னர் கந்துரையாடலிலும் தென்னாடு மடத்திற்கும், பாராளுமன்ற ஆராய்ச்சி உத்தியோகத்தர் சிவத்திரு. விஸ்வலிங்கம் முரளிதாஸ் இடையே இருந்தது. அதனை ஒரு விழாவாக முன்னெடுத்து களத்தில் நின்று நிறைவேற்றி வைத்த பெருமை அமைச்சர் அவர்களையே சாரும்.

இந்த சிறப்பு மிக்க பாராளுமன்ற பொங்கல் நிகழ்வினை சாத்தியமாக்கிய பெருமகனார், கௌரவ அமைச்சர் சிவத்திரு. இராமலிங்கம் சந்திரசேகர், பா.உ அவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, தைத் திங்கள் 19ம் நாள் (பெப் 01) 2025 சனிக்கிழமை தென்னாட்டில் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநர், வடமாகாண பிரதம செயலாளர், யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாசாலை அதிபர், இளையதம்பி மகா வித்தியாலய அதிபர், அகில இலங்கை சைவ மகா சபையினர் எனப்பலரும் மற்றும் அடியார்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். இந் நிகழ்வை தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்துடன் இணைந்து சிவத்திரு. விஸ்வலிங்கம் முரளிதாஸ் அவர்களும் (பாராளுமன்ற ஆராய்ச்சி உத்தியோகத்தர்) முன்னேடுத்திருந்தார்.

திருச்சிற்றம்பலம்









# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal




Siva P.Abiram SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Sivan is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraigal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Sampanthar returned to Seerkazhi after finishing his pilgrimages. When he got home, Thiruneela Nakka Nayanar, Muruga Nayanar, and some of his followers came to show their respect. By the time Sampanthar was sixteen, his father and relatives suggested that he should get married so that he could perform the necessary religious rituals. However, Sampanthar wasn't interested in worldly affairs and wanted to break free from earthly attachments. He replied, "What you're saying is usually reasonable, but it doesn't apply to me." His well-wishers tried to explain, "To uphold our religious customs, marriage is essential." In the end, Sampanthar agreed to marry in order to preserve tradition.

His relatives arranged for him to marry the daughter of Nambandar Nambi from Nalloor Perumanam (Achapuram). On the wedding day, Sampanthar went to the temple at Seerkazhi to pray. Afterward, he, along with his father and relatives, made their way to Nalloor. They were given a warm welcome. Sampanthar entered the marriage hall, where Nambandar and his family brought the bride and seated her next to him.

Thiruneela Nakka Nayanar performed the wedding rites. Holding his bride's hand, Sampanthar stood and rushed toward the Siva temple, with the crowd following him. In front of the Sivalingam, he sang a hymn that goes as follows:



கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே .

**Kalloorp perumanam vendaa kazhumalam**
**Palloorp perumanam paaddumey yaayththila**
**Solloorp perumanam soodala rethondar**
**Nalloorp perumana meyanam paane**

**In english this translates to:**

one who adorns himself with the garlands of verses which have subtle meaning like fragrance! Lord Civaṉ who is in Nalloorpperumaṇam where servants of god gather together! I do not desire the marriage during which the bridegroom has to place the right foot of the bride on the grinding-stone and other ceremonies. Have not the songs which I sang of Kalumalam Seerkali and many other shrines, come true?

**To be continued...**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org




# Karma (Vinai) : A Fundamental of Tamil Philosophy

Karma (Vinai) is an integral aspect of Tamil philosophy, shaping the moral framework of individual actions. It operates as the universal law of cause and effect every deed, whether virtuous or harmful, inevitably returns to its source. This fundamental belief is deeply embedded in Tamil literary and spiritual traditions, particularly in Saiva texts such as Sivagnanabhodam and the Thirukkural.

A notable example is Kural 318, which states:

**"இன்செயலும் ஒரு முறை தானெனும் என்திணைப்பாம் தாமே."**

"Even the smallest action, when done with sincerity, will come back with great rewards."

This couplet highlights the inescapable nature of karma, emphasising that every action has con sequences. However, Tamil philosophy does not advocate good deeds merely as a means to secure future rewards. Instead, the true essence of karma lies in selfless action performing good for the betterment of society rather than for personal gain. Genuine virtue is not transactional, it stems from a deep-rooted sense of duty and compassion. Thus, while karma reminds us to be mindful of our actions, it also calls for sincerity in our intentions. The ultimate goal is not just to accumulate positive karma but to cultivate a character that naturally radiates goodness.

Beyond personal conduct, karma also provides guidance on how to respond to adversity. In life, we inevitably encounter wrongdoing, whether through betrayal, injustice, or malice. The instinctive response may be to retaliate in kind, believing that vengeance restores balance. However, Tamil philosophy teaches otherwise. True strength lies not in retaliation but in rising above negativity with grace and dignity.

This is eloquently expressed in Kural 314:

**"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்."**

"The best way to punish those who have done you harm is to put them to shame by returning good for their evil."

By responding to harm with kindness, we not only preserve our own virtue but also hold a mirror to the wrongdoer's conscience. This principle urges us to let go of resentment, fostering a mindset free from grudges and pride. More than just an ethical ideal, it is a powerful strategy for inner peace and social harmony.

Ultimately, karma is not just about the consequences of our actions; it is a philosophy that encourages self-awareness, ethical living, and the cultivation of a compassionate heart. Whether in small daily decisions or life-altering choices, remembering the spirit of karma can guide us toward a more just and fulfilling existence.



# Saiva Saint Ilayankudi Maranar

# The Selfless Devotee who saw Sivam in Service

The timeless Periya Puranam, portrays devo tion not merely as an act of personal worship but as a lived experience which we see through the lives of the divine 63, ones that transcend rituals and manifest in unwavering faith and service. Among these illustrious devotees, the 3rd in the list, Ilayankudi Maranar stands as a striking example of selfless hospitality, where devotion was not confined to temple walls, but was expressed in everyday acts of giving, a core value of the then Tamil society. His story is not just one of piety, but of resi lience, surrender, and based on the belief that feeding a devotee was akin to worshipping Lord Siva himself, proving the valour of his dedication.

## The Early Life of the Saint

Ilayankudi Maranar hailed from Ilayankudi, a village in Tamil Nadu, from which he derived his name. He belonged to the Vellalar community, a class of prosperous agriculturalists who were deeply entrenched in agrarian life. Like many among the 63 Nayanmars, Maranar's devotion was not contemplative or ritualistic; it was embedded in his way of life but not as dexterous as the ones we see later on. This equally signified variety is an aspect of Saivam, given much emphasis by the Periya puranam.



Srisankarshan
Srisatkunarajah
English Editor
Thennadu

Maranar's service was centred on Anna thanam—the sacred act of feeding Sivanadiyargal (devotees), especially those of Virisa dai-Peruman whom he adored childishly. His home functioned as a 'Madam'/ Aashramam of hospitality, where any devotee of Siva was welcomed with reverence. The wealth he accumulated from his bountiful farmlands was never for personal indulgence. Instead, he considered it as Lord Siva's gift, to be used for his service. His belief was clear, feeding a devotee was a greater form of worship than offering rituals at a temple (in his particular case) as he intuited that this much success

must mean that it is an act of Siva Peruman, for the benefit of his very many devotees.

## Devotion Beyond comfort, and Charity beyond Poverty.

Wealth often grants generosity, but the true test of devotion is whether one remains generous even in scarcity. Maranar's life took a turn when his financial standing began to decline. Despite years of prosperity, his resources began to dwindle. His land, once abundant with crops, could no longer provide sustenance. Yet, his resolve to serve never wavered!

Even as famine struck and his family struggled for their own survival, Maranar never turned away a devotee. His belief remained unwavering—if Lord Siva sends a devotee to his home, then the Lord himself will ensure that he can serve them. His faith in this grew only stronger as each attempt of servitude became a resounding success in one way or another, though never easy or straightforward.

## The Test: Adiyar at the doorstep and an emaciated Maranar.

In many Nayanmar stories, devotion is tested through severe trials, and Maranar's ultimate test came on a stormy night. As relentless rain unleashed carnage on his village, at the witching hour, an elderly Sivanadiyar (devotee) arrived at his doorstep, seeking food and shelter. Maranar's joy knew no bounds! Despite his poverty, he saw the opportunity to serve as a divine blessing, knowing full well that he had to scramble to secure even one grain of rice.

Time for reality, there was nothing left in his possessions. His fields were barren, his granary was empty, and his once-lavish home had nothing but dusty pots and pans. Any ordinary person would have turned the guest away with an apology, but for Maranar, this was unthinkable! He and his wife decided that it was better to lie for a while than to deny a devotee of Siva Peruman a meal.

Braving the storm, Maranar ventured out into the darkness, gathering all the paddy seedlings, sacrificing his very last attempt at agriculture, a few leafy greens from the backyard, and whatever else nature had to offer. He sawed down the beams of this thatched roof house for firewood. With great care, his wife prepared a humble and sacred meal, presenting it to the guest with the same pomp and pageantry as offering a royal feast. Let us acknowledge that at this point, all means of any life and financial sustenance the Maranar family had saved up, went away fully in this final saga.

Upon the presentation of one of the most heartfelt and devout offerings the Lord had ever seen, the guest revealed his true form. He was none other than Siva Peruman himself. Moved by Maranar's and his equally if not more significant spouse's unwavering devotion, The Lord blessed him with divine grace, granting him eternal recognition among the Saivite clan.

## A Devotion Beyond Rituals

Ilayankudi Maranar's story carries profound spiritual and ethical significance. Unlike some Nayanmars, whose devotion was marked by penance or intellectual pursuits, Maranar's path was simple but powerful: seeing Sivam in service to others. His life reaffirms key principles of Saivism:

1. The Power of Annathanam – Feeding a devotee is seen as equivalent to worshipping Lord Siva.
2. Devotion through action – Maranar's devotion was not expressed through rituals but through selfless service, emphasising the importance of karma yoga, a possibility granting eternality.
3. Faith Over Fear – Even in poverty and hardship, he trusted that Siva Peruman would provide.

His story reminds us that devotion is not about wealth or status, but it is about an unwavering commitment to Tharmam (righteousness) , especially when faced with adversity.

To this day, Ilayankudi Maranar is venerated in temples across Tamil Nadu and World wide. His life is celebrated during the Guru Poosai of the 63 Nayanmars, and his unwavering hospitality continues to inspire devotees. His story serves as a guiding light, proving that in every act of selfless service, there resides the presence of the divine.

# History of Ancient Tamils - Major Historical Excavations



## Adichanallur

Adichanallur is an ancient city in Tamil Nadu dating back to a proven period between 1000 BCE and 600 BCE but various reports suggest an earlier time period making it one of India's oldest excavation sites. The findings included golden diadems, iron weapons, agricultural tools, and intricately designed bronze artefacts. These items not only reflect the technological and artistic advancements of the period but also provide insights into the societal practice and cultural priorities of the region. Its location is near the ancient Sangam seaport of Korkai and proximity to the Thamirabarani River coupled with some remains found of other cultures suggests that it could have been the centre of an ancient trade link. Adichanallur continues to enrich our understanding of the interconnected ness of ancient civilisations and the enduring legacy of Tamil culture.

## Keezhadi

Keezhadi, located near the Vaigai River in Sivaganga district, Tamil Nadu, about 12 km southeast of Madurai, is an archaeological site reflecting ancient Tamil Nadu culture. The hundreds of samples excavated from this site are dated between the 6th century BCE and the 3rd century BCE, highlighting the significance of understanding ancient Tamil history. Excavations at Keezhadi have revealed various structures and artefacts including brick walls, roof tiles, skeletal tools, Tamil inscribed plates and iron Vels. Keezhadi's extensive use of fired brick, the size of the building complex and water management systems provide strong reasons to suggest that the settlement was highly advanced and civilised. Some inscriptions even point to a link between ancient Tamil civilisations and the Indus Valley civilisation. Keezhadi reinforces the existence of a literate and urbanised Tamil civilisation and is evidence of the extensiveness of Tamil culture.



Siva P.Ketharan
English Editor – Thennadu



## Poompuhar

Another very ancient and important settlement in Tamil history is Poompuhar, a prominent port city that flourished around 2500 years ago. It served as a vital hub for maritime



trade, connecting the Tamil region with distant lands. At Poompuhar, excavations have found ancient wharves and docks dating back to the 3rd century BCE, these structures, constructed with brick walls and wooden poles, indicate advanced maritime infrastructure facilitating trade and commerce. This coincides with the Chola empire's great naval expertise which when coupled with this established port city, facilitated trade worldwide predominance to the gulf nations, the Roman empire and South East Asia. This made Poopahur a hub of ancient trade. Recent marine explorations have concluded that this once great city is now extensively submerged, possibly due to natural disasters like tsunamis.

## Anaikoddai

Anaikoddai is a town located in Jaffna in the Northern Province of Sri Lanka. Excava tions here have also revealed the advanced life of ancient Tamil people. Vast amounts of engraved pottery were found in the region based on Lakshmi coins and Roman pottery suggests that there were Tamil people living there at least 2300 years ago. Furthermore, a bronze seal was found with huge historical significance, dating back to the 3rd Century BCE. There were multiple symbols along the seal. These symbols are believed to be similar to ones in the Indus Valley meaning there is a possible link between the two civilisations.

## Cholas

The Chola dynasty is one of the most illustrious and enduring Tamil dynasties in human history, tracing its origins to the Sangam era and flourishing well into the 13th Century CE. They are well known for their military, navy, architecture, and their undying love for the Tami language and culture, with their efforts still observable today. The Cholas are first mentioned in Sangam literature, which dates back to the early centuries CE. They were one of the three crowned monarchs of Tamilakam, along with the Cheras and the Pandyas. The early Chola kingdom was centred around the fertile Kaveri River delta, with Uraiyur as its capital and Kaveripattinam (Poompuhar) as a prominent port. One of the earliest and greatest Chola kings was Karikala Cholan who is credited with many industrial projects that revolutionised the region. His most notable construction has to be the Kallanai which is the oldest functioning dam in the world. After the decline of the early Cholas, the dynasty went into obscurity for several centuries. During this period, Tamilakam saw the Kalabhras and the Pallavas rise. However, around the 9th Century CE, the Cholas re-emerged as a major power under Vijayalaya Chola. Vijayalaya captured Thanjavur and established it as the Chola capital. Aditya Chola I, the son of Vijayalala then maintained the Chola kingdom by fending off the Pallavas and Pandyas. Soon after, the Chola dynasty peaked with the reigns of the famous Raja Raja Chola I and Rajendra Chola I, expanding their territory and influence far beyond South India.

Contd...

# Melbourne Thaipongal Vizha 2025 Tamil Festival Australia



The day that all Tamil Melbournians had eagerly awaited all year has finally passed, leaving behind fond memories and a sense of strength within our Tamil community. Since 2011, our very own Casey Tamil Mandram has hosted a grand and vibrant Thaipongal event with the goal of preserving our rich culture and passing it on to the next generation. In 2011, this festival was held in a small hall with around 50 Tamil Melbournians. Over the years, the audience gradually grew, and our approach to hosting this event evolved, culminating in a staggering attendance of over 7,000 people in 2025. Although this event was originally a notion to preserve our history and traditions within the Tamil community, the Thaipongal Vizha has become so notorious among the diverse Australian communities, that not only Tamils attended, but people of all background and religions mingle in this event. This year, this dynamic festival was held at Melbourne Racecourse, and completely free of charge to attend. Considering the incredible turnout, the vibrant atmosphere, and the deep cultural significance, this festival was undoubtedly a success for Casey Tamil Mandram and collectively the Tamil Community.

The day started off bright and early at 8 o'clock in the morning, as some Tamil people drew Kolams around their mud pots before practicing the central tradition of preparing Pongal and offering food to the sun. After the delicious food was distributed and eaten, traditional forms of singing and dancing commenced. Tamil dance groups and singing groups were given the opportunity to display their talents to an audience on a large outdoor stage. The stage was also dedicated to young Tamil Australians who had learned and excelled in various traditional performance styles. Performances such as Kuththu and Kummiyadithal were showcased. It was a chance to share their skills. The stage remained active throughout the day, filled with performances, book releases, and award distributions. Many stalls catering to all ages and interests were available for attendees to enjoy. From photo booths, face painting, and caricature drawings to traditional Tamil food tasting, and Tamil artefacts display, a variety of activities were open to all. As lunchtime approached, people had the opportunity to explore and purchase food from some of Australia's favourite Tamil stores, such as Mango Tree and Green Cabin.




Nianthri Vijekumaran
Grade 9,
St Margaret's Grammar
Burwick

Attendees could also enjoy traditional Tamil foods and drinks like Moor. While the sun was scorching, we were fortunate to have some of the most refreshing juices and drinks available for purchase, such as favourites like Falooda and Nelli Crush. Furthermore, many Tamils were delighted to see numerous clothing stores selling traditional Tamil attire, such as Vettis and Sarees, at discounted prices. In the middle of the massive racecourse, traditional Tamil games were hosted, welcoming participants of all ages and genders. Games like Killithattu and Kabadi provided incredible entertainment, as teams from different parts of Melbourne came together in friendly competition. For those with eager children, carnival-like activities and rides were available. As the sun began to set, the stage transformed into a full concert, featuring incredible sound quality and lighting. The stars of the show were incredibly gifted, popular artists, singing and playing their music. Although everyone was exhausted from the day's events, we came together to dance and sing along to their favourite songs, performed by renowned Tamil singers like the Title Winner of Super Singer.

This yearly event's ultimate goal is to make our beautiful culture accessible for Tamil Australian youth, to participate in and learn from. This year's celebration certainly displayed that. We, as the next generation of Tamil Australians, were given the opportunity to wear our traditional attire, enjoy our favourite Tamil foods and essentially be present in our community. There is no doubt that this day is eagerly awaited for every year. Today's Tamil young adults have already begun volunteering and contributing to enrich this event, while also inviting friends both within and beyond the Tamil community. This event has played a crucial role in shaping many young Tamil Melbournians' understanding of Tamil culture, and it continues to do so. As the festival grows year after year, it not only preserves our traditions but also strengthens the Tamil identity for generations to come.

# First Doubt (Refuting Soonya Aanmavatham)



"We saw that the soul remains one with the body and hence cannot be seen by itself. So why can't we say that the soul does not exist as a separate entity at all?'

I reminded him of his neighbour, the old lady. 'She used to scold you while she was alive. But after her death did she scold you at all? Don't you see the glaring difference in her functioning before and after her death? What happened to her body? It was cremated to ashes.The soul was not present in the dead body. But was it not present while living? Think!

Further when we say that 'something is not there' what do we really mean? We have something in mind and say that 'that something' is not there. Is it not? Let us take an example.'The elephants are absent in cold climatic zones' - what does this statement indicate? Their absence in cold climates is the direct meaning. Besides that, does it not also indicate their presence in hot climatic zones? By the same logic, your statement "the soul does not exist" implies two points, 1. accepting the presence of the soul and 2. it is not present right now in this (dead) body.

Unconvinced by this my friend presented another viewpoint to augment his line of thinking about non-existence of the soul. He said, "Each and every part of our body like the head, hands and legs and so on being the soul gets negated by saying 'it is not the soul'. Then where exactly is the soul present in the body? It amounts to its absence. So why can't we say the soul does not exist at all?"

I told him, 'Just by asserting that each and every part of the body is not the soul we cannot claim for sure the absence of the soul. There is something in us that keeps negating the parts of the body as not the soul. That something remains after everything gets negated. That with which we are able to negate is present, is it not? Understand that to be the soul'.

The soul is not a gross object. It is a conscious intelligent entity. It cannot be seen by our physical eyes or ears. In fact It is imperceptible to any of the five senses. Since it is an intelligent entity, that intelligence itself exhibits life. Therefore the negating statement about the soul itself is intuitively indicative of its existence.

When every part of the body gets negated to be the soul you come to a state of nothingness. But you are still aware of that state of nothingness, is it not? That conscious, intelligent entity that is aware of the state of nothing is you, the soul.' Thus I deliberately went over the whole discussion elaborately to make the point clear.

Saiva Philosophy Reference:

In Saiva philosophy, the soul (Uyir) is an eternal, conscious entity distinct from the body. The body is made of material matter (Maayai), and while the soul cannot be perceived by the senses, its presence is indicated by the awareness of negating the body's parts. The soul remains conscious even when the body is negated, demonstrating its existence beyond the physical realm. This highlights the difference between the imperceptible, intelligent soul and the material body.

# தென்னாட்டு நிகழ்வுகள்



சாவகச்சேரி அருள்மிகு வாரிவனேசர் திருக்கோயில் 4ம் ஆண்டு சங்குநீராட்டு (08-01-2025)



பட்டிப் பொங்கல் வழிபாடுகள் - தென்னாடு கோசாலை (15-01-2025)





தைப் பொங்கல் வழிபாடுகள் (14-01-2025)





தைத் திங்கள் இதழ் வெளியீடு (14-01-2025)



# தென்னாட்டு நிகழ்வுகள்





திருவாதிரை அருட்காட்சி வழிபாடுகளும் திருவீதியுலாவும் (13-01-2025)




தென்னாடு சைவ மாணவர் சபை பாரம்பரிய பொங்கல் விழா - வாதரவத்தை (26-01-2025)



தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஐம்பத்து நான்காவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 சுறவம் நல்லோரை தைத் திங்கள் 30ம் நாள் நிறைமதி அன்று (12-02-2025 புதன்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம் சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org